# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு

**VII**

பகுதி–2

Kerala Reader - Tamil (AT)
Standard - VII
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2024

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

## தமிழ்

## 7

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமல்ல; அது நம் விழிக்குச் சமமானது. நாம் அன்றாடம் பயின்று வரும் மொழியில் குறிப்பாகத் தாய்மொழியில் பேசுவதற்கும் படிப்பதற்கும் எழுதுவதற்குமான அடிப்படை மொழியாற்றலை மட்டும் பெற்றிருந்தால் போதாது. மொழியின் அமைப்பு, ஆற்றல், நுணுக்கங்கள், அழகு, இனிமை, பழமை, வளமை இவற்றையும் அறிந்திருக்கவேண்டும்.

மொழியின் முக்கியமான ஓர் ஆற்றல், அது நம்மைக் கற்பனையுலகின் கண்ணெட்டா தூரத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதாகும். மொழிக் கல்வியானது படைப்பாற்றல் கொண்ட மாணவர்களுக்கு ஓர் உந்து சத்தியாக இருக்கும். சிலரது மொழிநடையே அவர்களை அடையாளம் காட்டிவிடுவதுண்டு. நாமும் நமக்கென ஒரு மொழிநடையை உருவாக்கப் பயிற்சி பெறுவோம்.

பாடநூல் என்பது அச்சடித்த தாள்களின் தொகுப்பு அல்ல; அதற்குள் நல்ல ஆசிரியர்கள், அறிவியலாளர்கள், தத்துவ மேதைகள், வாழ்க்கைக்கான வழிகாட்டிகள், கூடிப் பழகும் நண்பர்கள் முதலானோர் மறைந்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம். பாடநூல் நமக்குப் பயனுடையதாகவும், நாம் உட்பட்ட சமூகத்தின் இன்ப துன்பங்களில் கலந்துகொள்ளச் செய்வதாகவும், நாம் வாழும் நாட்டின் மேம்பாட்டில் ஈடுபடத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நல்லாசிரியர்களின் உதவியுடன் நாமே நம் அறிவை உருவாக்கிக்கொள்ளத் துணைபுரியவேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மொழிப் பாடநூல் உங்கள் சிந்தனையைச் செழிப்படையச் செய்யட்டும்.

வாழ்த்துகள்!

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Committee

## Tamil - VII - AT (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Hepsy Rose Mary, A.**
Associate Prof. Dept. of Tamil, University of Kerala, Kariavattom.

### Experts

**Dr. Benedy, K.**
Asst. Prof., Tamil, Govt. Art College, Thiruvananthapuram.
**Dr. Nisha Raffi,**
Associate Prof., (Rtd.), University College, Thiruvananthapuram.
**Dr. Prabhakaran, U.**
Former Professor, Tamil, University Thanjavur.

### Members

**Aji Prakash, M.H.**, UPST, GHS, Koovakkad, Kollam.
**Anand, C.**, PD Teacher, GVHSS & TTI, Kumily, Idukki.
**Arockia dhas, R.**, PD Teacher, GTHS, Mattathukad, Palakkad.
**Christu dhas, C.**, PD Teacher, Govt. Tamil VHSS, Chalai, Thiruvananthapuram
**Dr. Jeevalatha, S.**, HSST Tamil, Govt. Tamil HSS Chalai, Thiruvananthapuram.
**Manikandan, G.**, UPST, Govt. HSS, Anakkara, Idukki.
**Mohanadoss, G.**, HM (Rtd.), GTLPS, Edamalakudy, Munnar, Idukki.
**Natarajan, P.**, HM (Rtd.), Govt. Tamil LPS, Chalai, Thiruvananthapuram.
**Suprabha, S.**, PD Teacher, GVGHSS, Chittur, Palakkad.
**Wilsent, K.**, UPST, LMS Tamil HS, Parasala, Thiruvananthapuram.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Joban,** Artist, Nalanchira, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.,**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT..

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


4. நல்வழிகள் ................................................ 79 – 110

மேன்மை தரும் பண்புகள் .................................. 80 – 89

அறவழி கூறும் இலக்கியங்கள் ............................ 90 – 100

பிற உயிர்களை நேசித்தல்....................................101 – 110

5. கையிலே கலைவண்ணம் ............................ 111 – 134

மண்வாசனை.......................................................112 – 117

பேசும் தூரிகை ................................................ 118 – 124

விழாக்களும் பண்பாடும் .................................125 – 134

6. யாதும் ஊரே! யாவரும் கேளிர்.......................135 – 156

நாட்டின் நலனுக்காக .........................................136 – 142

வரலாற்று நாயகர்கள் ........................................ 143 – 151

எனது நாடு எனது பெருமை ................................152 – 156

**அகராதி** ..........................................................................157 – 158

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## அலகு 4

# நல்வழிகள்



மனிதனை மனிதனாக மாண்புறச் செய்வது அவனிடம் அமையும் அன்பு, இரக்கம், உண்மை, நேர்மை, கருணை, மனிதநேயம் போன்ற நற்பண்புகளே. மாறிவரும் இளம் தலைமுறையினரிடம் இந்தத் தனிமனிதப் பண்பாட்டுப் பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். நமது இலக்கியங்களிலும் இந்த அறநெறிப் பண்புகளே நிறைந்து இருக்கின்றன. அவ்வகையில் நம் முன்னோர்களும், தலைவர்களும் நமக்குக் காட்டிச் சென்ற இந்த உயர் பண்புகளையும் இலக்கியங்கள் கூறும் மதிப்புகளையும் மாணவர்களிடத்தில் எடுத்துச் சொல்லும் விதத்தில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# மேன்மை தரும் பண்புகள்



## வாய்மையே வெல்லும்

சனிக்கிழமை வந்தால் போதும்; மாணவர்களுக்கு ஒரே மகிழ்ச்சிதான். அன்று பிற்பகல் வகுப்பு இருக்காதல்லவா? வீட்டிற்குப் போகலாம்; விளையாடலாம்.

ஆனால், அன்றொரு சனிக்கிழமை, வழக்கம் போல் பிற்பகல் விடுமுறை கிடைக்கவில்லை. மாணவர்கள் அனைவரையும் அன்று மாலை பள்ளிக்கு வரும்படி ஆசிரியர் சொல்லிவிட்டார்.

'உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.'

ஆசிரியர் கட்டளை அல்லவா? போகாமல் இருக்க முடியுமா?

எல்லோரும் போக முடிவு செய்தார்கள்; ஒரு மாணவன் மட்டும் போக விரும்பவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று வீடு போய்த் திரும்பி மீண்டும் பள்ளிக்கு வரவேண்டும். மற்றொன்று தமது தந்தையின் அருகே அமர்ந்து அவருக்கு வேண்டிய பணிவிடை செய்ய வேண்டிய நேரம் அது.

"தெய்வமே. என்ன செய்வது?" அவன் மனம் குழம்பியது.

ஆசிரியரின் கட்டளையைத் தட்ட முடியுமா?

முதியவரான தந்தைக்கு உதவாமல் இருக்க இயலுமா?

அம்மாணவன் ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படி செயல்பட்டான். தமது தந்தைக்கு வேண்டிய பணிவிடை செய்து முடிந்ததும் பள்ளிக்கூடத்திற்கு விரைந்து சென்றான். நேரம் பிந்திவிட்டதை அவன் உணரவே இல்லை.

பள்ளிக்கூடம் சென்றபோது அங்கே எவரையும் காணமுடியவில்லை. உடற்பயிற்சி முடிந்து எல்லா மாணவர்களும் திரும்பிப் போய் விட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

"ஐயய்யோ இனி என்ன செய்வது?"

மறுநாள் வழக்கம் போல் அவன் பள்ளிக்கூடம் சென்றான்; வகுப்பில் அமர்ந்தான். ஆசிரியர் வந்தார்; வருகை ஏட்டைப் பார்த்தார். முந்தின நாள் உடற்பயிற்சி வகுப்பிற்கு, அந்த ஒரு மாணவன் மட்டுமே வராமல் இருந்ததைக் கண்டுபிடித்தார். கோபத்தோடு அவனைப் பார்த்தார்.

"எழுந்து நில்! உடற்பயிற்சி வகுப்பிற்கு நேற்று நீ ஏன் வரவில்லை?"

ஆசிரியரின் கடுங்குரல் கேட்டு வகுப்பே மௌனத்தில் மூழ்கியது.

"ஐயா! வழக்கம்போல் என் தந்தைக்குப் பணிவிடை செய்து விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டேன். அப்பொழுது மணி என்னவென்று பார்க்கவில்லை; ஓடோடி பள்ளிக்கு வந்தேன். நான் வந்து சேர்ந்த பொழுது பள்ளியில் ஒருவரையும் காணவில்லை. அப்போதுதான் நான் நேரம் கழிந்து வந்ததை உணர்ந்தேன். மிகவும் வருந்தினேன்". இவ்வாறு அம்மாணவன் நடந்ததை நடந்தபடிக் கூறினான். ஆனால், ஆசிரியர் அவன் சொன்னதை நம்பவே இல்லை. அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.



"ஓகோ! என்னைக் காதிலே பூவைத்தவன் என்று நினைத்து விட்டாயா? பள்ளிக்கு வராமல் வீட்டிலேயே இருந்துவிட்டு, வந்ததாகப் பொய்வேறு சொல்லுகிறாயா? உன்னைச் சும்மாவிட்டால் இந்தப் பள்ளி கெட்டுவிடும்; பள்ளிக்கும் வரவில்லை; வந்ததாகப் பொய்யும் சொல்லியிருக்கிறாய். இரண்டுக்கும் சேர்த்துத் தண்டனை பதின்மூன்று காசு அபதாரம் விதிக்கிறேன். உடனே கட்ட வேண்டும்!"

ஆசியரின் கட்டளை இடிபோல் முழங்கியது.

அம்மாணவன் துடிதுடித்துப் போனான். பிழைக்கட்டணம் பற்றி அவன் கலங்கவில்லை. தான் சொன்னதை ஆசிரியர் நம்பாமல் இருக்கிறாரே என்றுதான் வருந்தினான்.

அன்று அந்தச் சனிக்கிழமை மாலைநேரம். அவன் பள்ளிக்கு வந்திருந்ததைக் கண்டவர் எவருமிலர். எனவே தான் வந்திருந்ததை மெய்ப்பிக்க அவனுக்கு வேறுவழியும் தெரியவில்லை. துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது, அழுகை அழுகையாய் வந்தது. கட்டுப்படுத்த முடியாமல் கதறிக் கதறி அழுதான்.

சில வினாடிகள்தான் அழுதிருப்பான் அவனுக்கு ஓர் உண்மை புரிந்தது: அழுவதை நிறுத்தினான். உண்மையைக் கடைப்பிடிக்கும் ஒருவன் எப்பொழுதும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். குறித்த காலம் தவறவே கூடாது. அவ்வாறு தவறினால் என்னதான் உண்மையே பேசினாலும் பொய்ப் பேசுவதாகவே உலகம் கருதும்.

அனுபவம் வாயிலாக இவ்வுண்மையை அறிந்த அவன் அமைதி அடைந்தான். ஒரு முடிவு செய்தான்.

"இனிமேல் தன் வாழ்வில் ஒரு நொடிகூடக் காலந்தாழ்த்தக்கூடாது"

தன் வாழ்வின் கடைசி மணித்துளிவரை அதைக் கடைப்பிடித்தான் அவன்.

அது மட்டுமா?



பாடப் புத்தகத்தைத் தவிர வேறு புத்தகத்தை அவன் புரட்டிப் பார்த்ததுமில்லை; படித்ததுமில்லை. அதில் அவனுக்குக் கொஞ்சமும் விருப்பமுமில்லை. அப்படியிருக்கும்போது ஒருநாள் தன் தந்தை வைத்திருந்த ஒரு நூலை எடுத்தான். அது ஒரு கதைப் புத்தகம். விருப்பமில்லாமலேயே அதைப் படிக்கத் தொடங்கினான். படிக்கப் படிக்க அவனுள் ஏதோ ஒரு விதப் பரவசம்! தன்னை மறந்தான். மீண்டும் மீண்டும் வாசிக்கத் தோன்றியது; வாசித்தான்; வாசித்துக் கொண்டேயிருந்தான். அதிலேயே மூழ்கிப்போனான். படித்த கதை அவன் நெஞ்சிலே ஆழமாகப் பதிந்தது.

அதுவரை எவ்வளவோ பாடநூல்களை அவன் படித்திருக்கிறான். ஆனால், அன்று வாசித்த அந்த நூலைப் போல வேறு எந்த நூலும் அவன் உள்ளத்தைத் தொட்டதில்லை. தன்னுடைய அகக்கண் திறந்தது போல அவனுக்குத் தோன்றியது.

அந்த நூல் அவனுக்குப் பல உண்மைகளை உணர்த்தியது; அவனை ஒரு புதிய மனிதனாகவே அது மாற்றியது.

"என் வாழ்நாள் முழுவதும் என் உயிரே போனாலும் உண்மையே பேசுவேன்." இவ்வாறு அவன் தனக்குத்தானே சூளுரைத்துக் கொண்டான். அந்த உறுதியிலிருந்து தன் வாழ்நாள் இறுதி வரையிலும் பின் வாங்கியதேயில்லை.

அவன் வாழ்க்கையை மாற்றி அமைத்த அந்த அற்புத நூல் எது? அதுவே 'அரிச்சந்திரன் கதை'.

உண்மையைப் பேசியும் நேசித்தும் வாழ்ந்த அந்த மாணவன், பிற்காலத்தில் உலக மக்களால் 'மகாத்மா' என்று போற்றப்பட்டான். எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றியை ஈட்டினான். அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்காமலே அகில உலக மக்களின் இதய சிம்மாசனத்தில் நிரந்தர இடத்தைப் பிடித்தான்.

அந்த உத்தமன் யார்?

அவர் தாம் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற மகாத்மா காந்தி.

வாய்மையே வெல்லும்!

## செயல்பாடுகள்

◈ வாசிப்போம்; கண்டுபிடிப்போம்.

பாடப்பகுதியை வாசித்துக் கீழே காணும் வினாக்களுக்கு விடையைக் கண்டுபிடியுங்கள்.

- காந்தியடிகள் மனதில் உண்மையையே பேச வேண்டும் என்ற உறுதியை ஏற்படுத்திய நூல் எது?
- 'மகாத்மா' என அழைக்கப்பட்டவர் யார்?
- காந்தியடிகளின் முழுப்பெயர் என்ன?

◈ சொற்களைக் கண்டுபிடிப்போம்; பொருள் காண்போம்.

பாடப்பகுதியை வாசித்துப் புதிய சொற்களையும் அவற்றிற்கான பொருள்களையும் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- நூல்
-
-

◈ வாக்கியங்கள் எழுதலாம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்களைப் பயன்படுத்திப் பொருளுள்ள வாக்கியங்களை உருவாக்குங்கள்.

- எள்ளும் கொள்ளும் வெடித்தது.
- காதிலே பூ.

◈ காந்தியடிகளின் இளம் வயது வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வுதான் நம் பாடப்பகுதி. அவரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த தகவல்களைத் திரட்டித் தொகுப்பாக வெளியிடுங்கள்.

- பிறப்பு – 1869 அக்டோபர் 2
- இடம் –
- பெற்றோர் –
-

## உலக ஒற்றுமை

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!
கன்னலடா என் சிற்றூர் என்போ னுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல்!



ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச் செய்வார்
மாம்பிஞ்சு உள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூயவுள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் "ஒன்றே" என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே,

– பாரதிதாசன்

## ஆசிரியர் குறிப்பு



பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். இவர் 29.4.1891-ஆம் ஆண்டு புதுவையில் பிறந்தார். இவரது பெற்றோர் கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள். மக்களால் பாவேந்தர் எனவும் புரட்சிக் கவிஞர் எனவும் போற்றப்பட்டார். குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு முதலிய பல்வேறு நூல்களையும் தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் 21.04.1964–இல் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

◈ வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்.

பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பாடலை வாசித்துப் புதிய சொற்களைக் கண்டுபிடியுங்கள். அவற்றிற்கான பொருளை அகராதியைப் பார்த்து எழுதுங்கள்.

- பெண்டு....................
- சம்பாத்யம்..............
- ...................................
- ...................................
- ...................................
- ...................................
- ...................................
- ...................................
- ...................................
- ...................................

◈ கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

- இவையுண்டு – இவை + உண்டு
- சின்னதொரு –
- பயனற்ற –
- தொல்லுலகம் –
- தன்னலம் –

◈ வினாக்களுக்கு விடை காண்போம்.

- கடுகு போல் உள்ளம் கொண்டவன் ..............................

- தொன்னை என்பதன் பொருள் ..................................
- தாயுள்ளம் கொண்டவன் எப்படிப்பட்டவன்?
- பாரதிதாசனின் இயற்பெயர் ..........................
- பாரதிதாசன் எழுதிய இரண்டு நூல்களின் பெயர்களை எழுதுங்கள்.

◈ பாடல்களைச் சேகரிக்கலாம்.

ஒற்றுமை உணர்வை வலியுறுத்தும் பாடல்களைச் சேகரியுங்கள்.

◈ கதைகள் கூறலாம்.

குறிப்புகளின் அடிப்படையில் கதையை முழுமையாக்கி எழுதுங்கள். தலைப்புக் கொடுங்கள்.

நான்கு எருதுகள்– ஒற்றுமை– சிங்கம்– கொல்ல முயற்சித்தல் – ஒற்றுமையாய் விரட்டுதல் – நரியிடம் ஆலோசனை – எருதுகளைப் பிரித்தல்– இருவரும் சேர்ந்து ஒவ்வொன்றாகக் கொல்லுதல்– உண்ணுதல்.

◈ "ஒற்றுமை உணர்வு" பற்றி உங்களுக்குத் தெரிந்த கதைகளைச் சேகரிக்கலாமா?

◈ பாடலை எளிய மெட்டமைத்துப் பாடுங்கள்.

## திருக்குறள்

### உடைமைகள் பத்து

1. **அன்புடைமை**

   அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
   நண்பென்னும் நாடாச் சிறப்பு.

2. **அடக்கமுடைமை**

   ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
   எழுமையும் ஏமாப் புடைத்து.

3. **ஒழுக்கமுடைமை**

   ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவர் எய்தாப் பழி.



4. **பொறையுடைமை**

   ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
   பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

5. **அருளுடைமை**

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.



6. **அறிவுடைமை**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

7. **ஊக்கம் உடைமை**

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.




8. **ஆள்வினை உடைமை**

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.



9. **பண்புடைமை**

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

10. **நாணுடைமை**

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

– திருவள்ளுவர்

## செயல்பாடுகள்

- வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்.
  - திருக்குறளில் கூறப்படும் பத்து உடைமைகள் எவை என எழுதுங்கள்?
  - 'பழி' என்ற சொல்லில் முடியும் திருக்குறளைக் கூறுங்கள்.
  - 'அறிவுடைமை' என்ற அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள குறட்பாக்களைத் திரட்டிக் கூறுங்கள்.
  - திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைக் கூறுக.
  - திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் .........
  - 'ஆமை' என்ற பெயர் வரக் கூடிய திருக்குறளைக் கூறுங்கள்.

- அகராதியைப் பயன்படுத்திப் பொருளைக் கண்டுபிடியுங்கள்.
  - ஈனும் –
  - எழுமை –
  - இழுக்கம் –
  - ஒறுத்தார் –
  - மாந்தர் –
  - பொன் –
  - வெள்ளம் –
  - கலம் –
  - உறைபதி –

- குறிப்புகள் சேகரிக்கலாம்.
  - திருவள்ளுவர்
  - திருக்குறள்

- குறளையும் – பொருளையும் சரியாக இணையுங்கள்.

| | |
|---|---|
| எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு. | நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே. அதுபோல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே. |
| தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும். | ஒழுக்கத்தினால் உயர்வை அடைவர். ஒழுக்கம் இல்லாதவர் வேண்டாத பழியை அடைவர். |
| ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி. | தனக்குத் தீமை செய்தவரைப் பொறுக்காமல் தண்டித்தவரைப் பெரியோர் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார். பொறுத்தவரையோ பொன்னாகக் கருதி மதிப்பர். |

| | |
|---|---|
| வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்<br>உள்ளத் தனையது உயர்வு. | விதி நமக்கு உதவ முடியாது போனாலும் முயற்சி நம் உடல் உழைப்பிற்கு ஏற்ற பலனைத் தரும். |
| ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்<br>பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. | எந்தக் கருத்தை எவர் சொன்னாலும் அக்கருத்தின் உண்மையைக் காண்பது அறிவு. |

## மதிப்பிடலாம்

- காந்தியடிகள் "உண்மையையே பேச வேண்டும்" என்ற கொள்கையைக் கடைபிடிக்கக் காரணமான நிகழ்வை வாசித்தீர்கள் அல்லவா? இதுபோல் உங்கள் அனுபவத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்வை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- உங்களிடம் உள்ள நல்ல பண்புகள் எவை? அவற்றைப் பட்டியலிடுங்கள்.
- உங்களுக்கு ஒரு நபரைப் (ஆசிரியர், உறவுகள், நண்பர்கள், பெரியவர்கள்) பிடிப்பதற்குரிய காரணங்களையும் அவரிடமிருந்து உங்களுக்குப் பிடித்த குணங்களையும் எழுதுங்கள்.
- ஒற்றுமை பற்றிய பாடல் தொகுப்பைத் தயாரியுங்கள்.
- பாடப் பகுதியில் இடம் பெறாத திருக்குறள் சிலவற்றைத் திரட்டித் தொகுப்பாக வெளியிடுங்கள்.
- அதிகமான குறள்களைக் கூறும் நபரைக் கண்டுபிடிப்போம்.






## கடமைகள் (நாடகம்)

**காட்சி – 1**

**இடம் : வீடு**

**மாந்தர் : இலட்சுமி, ரமணி, முரளி**

(தாய் இலட்சுமிக்குக் காய்ச்சல்... படுக்கையில் இருக்கிறாள்.... பிள்ளைகள் ரமணி ஒன்பதாம் வகுப்பு... முரளி எட்டாம் வகுப்பு.

மாலையில் பள்ளி முடிகிறது. திடலில் விளையாடியபின் வீட்டுக்கு வருகிறார்கள். இலட்சுமியின் கட்டிலுக்கு அருகில் வந்து நிற்கிறார்கள்.)

இலட்சுமி : கால் கை கழுவியாச்சா...? (கழுவுகிறார்கள்)
வேலை செய்யற அமுதா சமைச்சாங்க; உணவு நேரத்திற்கு வந்ததா? எப்படி இருந்தது....முரளி? கேரட், பீட்ரூட் இல்லேன்னா உனக்குச் சாப்பாடு இறங்காதே... அக்கறையோடு கேட்கிறாள். இருவருக்கும் ஆரஞ்சு கொடுக்கிறாள்.

ரமணி : அம்மா... உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கு...?

இலட்சுமி : நல்லா இருக்கு... கவலைப்படாம பாடத்தைப் படிங்க. (அவர்கள் படிக்கிறார்கள்.)
சற்று நேரத்தில் முரளி தொலைக்காட்சியை ஒலி

இல்லாமல் பார்க்கிறான். உணவு நேரம்... பசிக்கிறது. இலட்சுமி நன்றாக இருந்தால் இந்நேரம் உணவு அவர்களைத் தேடி வந்திருக்கும்.

ரமணி : வா... வேற வழியில்ல... நாம்தான் தட்டை எடுத்துத் தேவையானதைப் போட்டுக்கணும்.

முரளி : நான் சமையற்கட்டுப் பக்கம் போனதே இல்லை. தாகம்னாக்கூட அம்மாவைத்தான் கூப்பிடுவேன்.

ரமணி : நான் மட்டும் என்ன... அம்மா ஏதாவது தின்பண்டம் செய்வாங்க... அப்போ எட்டிப் பார்ப்பேன்.

(தட்டில் சோற்றைப் போடுகிறார்கள். கீழே பருக்கைகள் சிந்துகின்றன. உண்டபின் தட்டிலேயே கையைக் கழுவுகிறார்கள்.)

முரளி : உன் தட்டைக் கழுவும்போது என் தட்டையும் கழுவி விடு...

ரமணி : நான்மட்டும் தட்டுக் கழுவுறவளா...அப்பா கலெக்டர்... நான் கலெக்டர் வீட்டுப்பிள்ளை அதிலும் பெரியவள்! நீ சின்னவன்... நீ ரெண்டு தட்டுகளையும் கழுவினா என்ன?

முரளி : நானும்தான் கலெக்டர் வீட்டுப்பிள்ளை. நான் மட்டும் எதுக்குக் கழுவணும்?

...என் தட்டையே நான் கழுவமாட்டேன்... இதிலே உன் தட்டையும் சேர்த்துக் கழுவ எனக்கு என்ன பைத்தியமா?

(இருவரும் வெளியே வந்து கைகளைக் கழுவுகிறார்கள். கழுவாத தட்டுகள்... சிந்திய பருக்கைகள் அப்படியே கிடக்கின்றன. வாசலில் கார் வரும் ஒலி... தந்தை மதிவாணன் வருகிறார்.)



**காட்சி – 2**

**இடம் : வீடு**

**மாந்தர் : மதிவாணன், இலட்சுமி, ரமணி, முரளி**

(மதிவாணன் காலணியைக் கழற்றுகிறார். கழுத்துப்பட்டையை(டை) உரிய இடத்தில் மாட்டுகிறார்... உடைகளை மாற்றுகிறார். பிள்ளைகள் அமைதியாகப் படிப்பதைப் பார்க்கிறார்.)

அவர் சமையலறைக்குப் போகிறார். தட்டுகளைக் கழுவுகிறார்; பருக்கைகளை எடுக்கிறார்: தரையைத் துடைக்கிறார்.

தன் வீட்டு வேலைகளை அலுவலக ஊழியர்களை வைத்து அவர் செய்வதில்லை. இது அவருடைய கொள்கை.

ஒரு மாவட்ட ஆட்சியர் எச்சில் தட்டைக் கழுவுவதைப் பிள்ளைகள் விந்தையாகப் பார்க்கிறார்கள். இரவு உணவுக்குப்பின் படுக்கச் செல்கிறார்கள்.



**காட்சி – 3**

**இடம் : வீடு**

(மறுநாள் காலை ரமணிக்கும் முரளிக்கும் மேசையில் தேநீர் (மூடியுடன்) பிஸ்கெட்!)

...எழுந்து பல் தேய்க்கிறார்கள்.

...மதிவாணன் கழிவறை 'பேசினைச்' சுத்தம் செய்வதைப் பார்த்து அவர்கள் திகைக்கிறார்கள்.

அவர்...இலட்சுமிக்கும் அவர்களுக்கும் உணவு ஏற்பாடு செய்துவிட்டு அலுவலகம் புறப்படுகிறார்.

எரிச்சலையோ கோபத்தையோ எவரிடமும் காட்டாமல் தனக்கான கடமைகளில் மட்டும் அவர் கவனத்தைச் செலுத்தியது அவர்களைச் சிந்திக்க வைக்கிறது.

...எந்தப் பணியில் இருந்தாலும் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் கடமைகளில் உயர்வு தாழ்வு பார்க்காமல் அவற்றைச் செய்பவர் பெரியவர்!

...செய்யும் தொழிலைத் தாழ்வாகவும் இழிவாகவும் நினைப்பவர்... வீட்டுக் கடமைகளில் உதவியாக இல்லாதவர் சிறியவர்!' என்ற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிகிறது.

இருவரும் கூடத்துக்கு வந்து அங்கிருந்த காந்தியின் படத்துக்கு முன்னால் ஒரு நிமிடம் அமைதியாக நிற்கிறார்கள்.

**காட்சி – 4**

**இடம் : வீடு**

**மாந்தர் : இலட்சுமி, ரமணி, முரளி**

(இருவரும் தாய் இலட்சுமி இருக்கும் இடத்திற்குப் போகிறார்கள்.)

ரமணி : அம்மா ஏதாவது தேவையா?

முரளி : நாங்க லீவு போட்டு உங்களைப் பாத்துக்கறோம்மா...

இலட்சுமி : அதெல்லாம் வேண்டாம். ஒரு நாள் பள்ளிக்குப் போகலேன்னாலும் அன்றைக்கு நடத்தின பாடம் புரியாது. போங்க.

ரமணி : வரும்போது மருந்து மாத்திரை வாங்கணுமா?

முரளி : பால் பாக்கெட்... மாவு பாக்கெட் வேணுமா?

இலட்சுமி : (முகம் மலர்ந்து) நீங்க இவ்வளவு தூரம் அக்கறையா கேட்கறதே எனக்கு மகிழ்ச்சியா இருக்கு.

நீங்க சாயங்காலம் வரும்போது நான் பழையபடி நடமாட ஆரம்பிச்சிடுவேன்.

(அவர்கள் மகிழ்ச்சியோடு பள்ளிக்குப் போகிறார்கள்).

–திரை–

– பூதலூர் முத்து.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - ரமணியின் அப்பா என்ன வேலை செய்கிறார்?
  - மதிவாணனின் கொள்கை என்ன?
  - யார் பெரியவர்? யார் சிறியவர்? அதற்கான காரணத்தைக் கூறுங்கள்.
- ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிப்போம்.
  - கலெக்டர்
  - பிஸ்கெட்
  - கார்
  - பக்கெட்
- புதிய சொற்களைக் கண்டுபிடியுங்கள். அகராதியைப் பார்த்துப் பொருள் காணுங்கள்.
  - திடல் –
  - காலணி –
  - ஊழியர் –
- உங்கள் வீட்டில் நீங்கள் என்னென்ன வீட்டு வேலைகளைச் செய்வீர்கள்?. எழுதுங்கள்.
- கீழ்க்காணும் பாரதியார் பாடலை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள். எழுதுங்கள்.

ஒற்றைக் குடும்பந்தனிலே – பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே – மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
ஏவல் செய்பவர் மக்கள் – இவர்
யாவரும் ஓர் குலம் அன்றோ!

## நேர்மையின் பரிசு

'பூஞ்சோலை' என்ற கிராமத்தில் மணி என்ற சிறுவன் தன் தாயுடனும் தங்கை வள்ளியுடனும் வசித்து வந்தான். அது ஒரு சின்னக் கிராமம்தான். இருந்தாலும் நல்ல கிராமம்.

மணி சென்ற வருடம்தான் பத்தாம் வகுப்பை முடித்திருந்தான். மேலே படிக்க வேண்டும் என்று அவனுக்கு ரொம்ப ஆசை. ஆனால் அவனுடைய பொருளாதார நிலை அவனைப் படிக்க விடவில்லை. பணப் பற்றாக்குறை இருந்தாலும் மணியின் அம்மா அவனை நேர்மையாக வளர்த்திருந்தாள். நேர்மையின் மறு பெயர் மணி.

தானும் ஏதாவது வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால் அம்மாவுக்கு உதவியாக இருக்குமே என்று எண்ணியதால் வேலைக்குச் செல்லத் தீர்மானித்தான். வேலைக்காக அலைந்து கொண்டிருந்தான். அவனுடைய நல்ல குணமான நேர்மையே அவனுக்கு எதிரியாகி, வேலை கிடைக்கவிடாமல் செய்தது.

அந்த ஊரிலிருந்த மளிகைக் கடையில் எடுபிடி வேலை செய்ய மணி சேர்ந்தான். அந்த முதலாளி பொருட்களை அளக்கும்போது குறைத்து அளக்கும்படி அவனிடம் கூறியதால் அந்த வேலை பிடிக்காமல் வந்துவிட்டான். இப்படியே ஒவ்வொரு இடத்திலும் அவனுடைய வேலைக்கு ஒரு தடங்கல் வந்ததால் அவனால் எந்தவொரு வேலையிலும் நிரந்தரமாக இருக்க முடியவில்லை.



ஒரு வாரமாக மணியின் அம்மாவுக்குக் கடுமையான ஜுரம். அதனால் அம்மாவால் வேலைக்குப் போக முடியவில்லை. அதனால் வீட்டில் வறுமை தாண்டவமாடியது. அப்போது வீட்டு வாசலில் "யாரப்பா உள்ளே?" என்ற அதிகாரக் குரல் கேட்டது.

வந்தது வேறு யாருமில்லை. மணி குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர்தான்.

வீட்டைவிட்டு வெளியே வந்த மணி. "ஐயா! உள்ளே வாங்க," என்று அழைத்தான். உள்ளே வந்தார் வீட்டுக்காரர்.

"ஐயா உட்காருங்க" என்று மணி சொல்ல, அங்கிருந்த ஆடும் நாற்காலியில் விழுந்துவிடுவோமோ என்ற பயத்துடனேயே நுனியில் உட்கார்ந்தார் வீட்டுக்காரர்.

" என்னம்மா, மூன்று மாச வாடகை பாக்கி. எப்போ கொடுக்கப் போறே?" என்று அதிகாரக் குரலில் வீட்டுக்காரர் கேட்டார்.

"ஐயா! கொஞ்சம் பொறுத்துக்குங்க." என்று பேசியவளை, மேலே பேசவிடாமல் 'லொக்.. லொக்...' என இருமல் வந்து தொற்றிக் கொண்டது.

"இந்த மாசத்திற்குள் வாடகை கொடுக்கலைன்னா வீட்டைக் காலிப் பண்ணிடுங்க!" என்று கண்டிப்பான குரலில் பேசினார் வீட்டுக்காரர். வீட்டுக்காரரை வழியனுப்புவதற்காக வாசல் வரை மணியும் வந்தான்.

"ஐயா நானும் ஏதாவது வேலைக்குப் போய்க் கூடிய சீக்கிரம் உங்க வாடகைப் பணத்தைக் கொடுத்துடறேன்!" என்று கெஞ்சினான் மணி.



"அண்ணா இங்க வாயேன்," என்று தங்கை வள்ளி குரல் கொடுத்தாள்.

"ஐயா... நான் வரேன்," என்று சொல்லிவிட்டு, எதற்காகக் கூப்பிடுகிறாள்?' என்று எண்ணியபடியே உள்ளே சென்றான் மணி.

அங்கு வள்ளியின் கையில் பத்து ரூபாய் அடங்கிய கட்டு ஒன்று இருந்தது. "அண்ணா! இந்த நாற்காலியில் இந்தப் பணமிருந்தது," என்று சொல்லி மணியிடம் கொடுத்தாள் வள்ளி.

வியப்புடன் பணத்தைப் பார்த்த மணி. "ஐயய்யோ! இப்போ வந்தாரே வீட்டுக்காரர். அவருடைய பணம்தான் இது. அவரிடம் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்," என்று சொல்லி, வள்ளியிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு வாசலுக்கு ஓடினான் மணி.

"ஐயா...! ஐயா...!" என்று அழைத்தான் மணி.

சிறிது தொலைவே போயிருந்த வீட்டுக்காரர் மணி தன்னைத்தான் கூப்பிடுகிறான் என்று திரும்பிப் பார்த்தார்.

மூச்சிரைக்க ஓடி வந்த மணி. "ஐயா, இந்தப் பணம் உங்களுடையது தானே?" என்று திக்கித் திக்கிப் பேசினான்.

உடனே ஜிப்பாவின் சைடு பாக்கெட்டில் கையை விட்டுப் பார்த்த வீட்டுக்காரர், அதில் பணம் இல்லாதது கண்டு. "ஆமாம்பா, உன்கிட்ட எப்படி?" என்று வியப்புடன் பார்த்தார்.

நீங்க உட்கார்ந்திருந்த நாற்காலியில் கிடந்தது!" என்றான் மணி.

அப்போதுதான் வீட்டுக்காரருக்கு, வியர்வையைத் துடைக்க கர்ச்சீப்பை எடுத்தது நினைவுக்கு வந்தது. கர்ச்சீப்பை எடுக்கும் போது பணம் வெளியே விழுந்திருக்கும் என்று புரிந்தது.

"மணி! இவ்வளவு சின்ன வயசில் உன்னுடைய நேர்மையைப் பார்த்து எனக்குப் பெருமையாக இருக்கு. நீ நினைத்திருந்தால் இந்தப் பணத்தை எடுத்திருக்கலாம். உனக்கு இப்போது இருக்கும் பணக் கஷ்டத்தில் இந்தப் பணம் இருந்தால் நீ உன் அம்மாவை டாக்டரிடம் காட்ட உபயோகப்படுத்தியிருக்கலாம். அல்லது நாளையே இதை என்னிடம் கொடுத்து மூன்று மாத வீட்டு வாடகையென்று கொடுத்திருக்கலாம்.

"ஆனால் அப்படி எல்லாம் செய்யாமல் உன் பணத் தேவையைப் பற்றிக் கொஞ்சம்கூட யோசிக்காமல், இது என்னுடைய பணமாகத்தான் இருக்கும் என்று என்னிடம் கொடுத்த உன் நேர்மையை நான் பாராட்டுகிறேன்," என்று மனம் நெகிழ்ந்து பேசினார் வீட்டுக்காரர்.



"ஐயா, இன்னிக்கு இந்தப் பணத்தை உங்களிடம் கொடுக்காமல் வெச்சிருந்தால் இன்றைய என் தேவைகளுக்குப் பயன்படும்தான். ஆனால் எங்க அம்மா பொய் சொல்லக் கூடாது. மற்றவர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாதுன்னு சொல்லிச் சொல்லியே எங்களை வளர்த்திருக்காங்க" என்று பெருமையாகச் சொன்னான்.

"உன் நேர்மையைப் பாராட்டி உனக்குப் பரிசா இதில் பாதிப் பணத்தைக் கொடுக்கிறேன்," என்று சொல்லி பணத்தை நீட்டினார்.

"ஐயா, எனக்கு அன்பளிப்பா இந்தப் பணம் வேண்டாம். கடனாகக் கொடுங்க. நான் ஏதாவது சின்னக் கடை வெச்சு நேர்மையா உழைச்சு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறேன்," என்று நம்பிக்கையோடு பேசிய மணியை வீட்டுக்காரர் ஆச்சரியமாகப் பார்த்தார்.

"தம்பி, உன் விருப்பம். எனக்கு நான் படித்த திருக்குறள் ஒன்று நினைவுக்கு வருது. ஒருவன் பொய் பேசாமல் நேர்மையுடன் வாழ்ந்தால் அது அவனுக்குப் புகழை மட்டுமல்ல; வாழ்க்கையில் ஒரு நேர் வழியையும் காட்டி நல்லவற்றையே நடத்தும் என்ற குறளுக்குப் பொருத்தமானவன் நீதான். உன் நேர்மை உனக்கு நல்ல அறத்தையே கொடுக்கும்!" என்று வாழ்த்தி மணியிடம் பணத்தைக் கொடுத்தார்.

மகிழ்ச்சியுடன் பணத்தைப் பெற்றுக் கொண்ட மணி ஒரு பெட்டிக் கடை வைத்து, நேர்மையுடன் கடுமையாக உழைத்து நல்ல நிலைக்கு வந்தான்.

"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

எல்லா அறமும் தரும்". (குறள் 296)

ஒருவனுக்குப் பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்றும் இல்லை. அஃது அவன் அறியாமலேயே அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும்.

## செயல்பாடுகள்

- வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்.
  - கதையில் கூறப்பட்டுள்ள திருக்குறளைக் கூறுங்கள். எழுதுங்கள்.
  - மணியின் அம்மா அவனை எப்படி வளர்த்திருந்தார்?
  - மணியின் நேர்மைக் குணத்தைச் சான்றுடன் கூறுங்கள்.
  - முதலாளி, மணிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்?
- பாடப்பகுதியை வாசித்து இதுபோன்ற புதிய சொற்களைக் கண்டுபிடித்துப் பொருள் காணுங்கள்.
  - மளிகைக் கடை
  - வியப்பு
  - நெகிழ்ந்து
  - நேர்மை

◈ வேற்றுமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

- ஜுரம்
- கர்ச்சீப்
- கஷ்டம்
- டாக்டர்

◈ புதிய பாடல் எழுதுவோம்.

- நல்லவனாக இருக்கணும் தம்பி –நீ
  நாடு போற்ற ........................ தம்பி
  உண்மையாக இருந்தால் தம்பி – நீ
  உலகம் போற்ற ........................ தம்பி
  ........................ குணம் வேண்டும் தம்பி – அது
  ............................................................ தம்பி
  ............................................................
  ............................................................

◈ எதிர்ச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

- உண்மை ×
- வறுமை ×
- குறைவு ×
- எதிரி ×
- நல்ல ×
- நேர்மை ×

◈ மணியின் நேர்மைக் குணத்தைப் பாராட்டி அவனுக்கு ஒரு வாழ்த்து மடல் அனுப்பலாமா?

## நான்மணிக்கடிகை

மொய்ச்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்ச்சிதைக்கும் பொன்போலும் மேனியைப் – பெய்த
கலம் சிதைக்கும் பாலின் சுவையைக் குலம் சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

– விளம்பிநாகனார்.

விளக்கவுரை: ஒற்றுமை இல்லாமை, ஒருவனது வலிமையை அழிக்கும்; பொய்யானது ஒருவனது பொன் போன்ற உடலை அழிக்கும் பால் நிரப்பப்பட்ட தூய்மையற்ற பாத்திரம் பாலின் சுவையைக் கெடுத்து விடும்; சேரத் தகுதியற்றவருடன் கொண்ட நட்பானது தன் குலத்தையே அழித்து விடும்.

சொற்பொருள்: மொய் – வலிமை, சிதைக்கும் – அழிக்கும், மேனி – உடம்பு, கூடார் – தகாதவர் (பகைவர்)

**இனியவை நாற்பது**

ஐவாய வேட்கை அவாஅடக்கல் முன்இனிதே
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கண் தீர்வினிதே
நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது.

– பூதஞ்சேந்தனார்.

விளக்கவுரை: மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளின் வழியால் வரும் ஆசைகளையும் அதன்மேல் செல்லும் நினைவையும் அடக்குதல் இனிது. கையில் நிற்கக் கூடிய பொருளைப் பெறுவதாயினும் கல்லாதவரை நீக்கி விடுதல் இனிது. நிலையற்ற அறிவையுடைய அடக்கமற்ற மனிதரைச் சேராது நீங்குதல் மிக இனிது.



சொற்பொருள்: ஐவாய வேட்கை – ஐம்புலன்களின் வழியாகத் தோன்றும் விருப்பம், புல்லாவிடுதல் – சேராமல் நீங்குதல்.

**நீதி வெண்பா–**

கொம்புளதற்கு ஐந்து, குதிரைக்குப் பத்து முழம்
வெம்பு கரிக்கு ஆயிரந் தான் வேண்டுமே;
வம்பு நெறி தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

விளக்கவுரை : கொம்பு உள்ள விலங்குகளை விட்டு ஐந்து முழம் தூரமும் குதிரையை விட்டுப் பத்து முழம் தூரமும் மதம் மிகுந்த யானையை விட்டு ஆயிரம் முழம் தூரமும் விலகியிருக்க வேண்டும். ஆனால் தீயவர்களிடமிருந்து கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் நீங்கி நிற்பதே நல்லதாகும்.

**பத்துப்பாட்டு நூல்கள்**

திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
முல்லைப்பாட்டு
மதுரைக்காஞ்சி
நெடுநல்வாடை
குறிஞ்சிப்பாட்டு
பட்டினப்பாலை
மலைபடுகடாம்

சொற்பொருள் : வெம்புகரி – மதயானை, வம்பு நெறி – தீமைகள் மிகுந்த

**மூதுரை**

அட்டாலும் பால் சுவையிற் குன்றாது – அளவளவாய்
நட்டாலும் நண்பல்லார்–நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே – சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.



– ஔவையார்

**எட்டுத்தொகை நூல்கள்**

குறுந்தொகை
நற்றிணை
அகநானூறு
ஐங்குறுநூறு
கலித்தொகை
பரிபாடல்
புறநானூறு
பதிற்றுப்பத்து

விளக்கவுரை: பாலினை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது. கடலில் விளையும் சங்கினை நெருப்பில் சுட்டாலும் வெண்மை நிறம் மாறாது. அவை போல அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மேன்மக்களாகிய நல்லோர், வறுமையுற்று வாடும் நிலையிலும் தமது குணநலன்களில் இருந்து விலகிச் செல்லமாட்டார்.

சொற்பொருள் : அட்டாலும் – காய்ச்சினாலும், நண்பு – நட்பு

## செயல்பாடுகள்

- ஒருவனுடைய குலத்தையே எது அழித்துவிடும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது?
- ஐம்புலன்கள் எனப்படுபவை.
  - மெய்  ◆............... ◆ ................ ◆ ................ ◆ ...............
- 'கெட்டாலும், மேன்மக்கள் மேன்மக்களே' என்று பாடிய புலவர் யார்?
  - ஔவையார் ◆ பூதஞ்சேந்தனார் ◆ விளம்பிநாகனார்
- பூதஞ்சேந்தனார் கூறும் இனியவைகள் யாவை?
- புலவர்களையும் அவர்கள் எழுதிய நூல்களையும் சரியாக இணையுங்கள்.
  - ஔவையார் – திருக்குறள்
  - பாரதிதாசன் – நான்மணிக்கடிகை
  - பூதஞ்சேந்தனார் – மூதுரை
  - திருவள்ளுவர் – உலக ஒற்றுமை
  - விளம்பி நாகனார் – இனியவை நாற்பது
- பொருள் கண்டுபிடிப்போம்.
  - சிதைக்கும் ◆ அட்டாலும்
  - வேட்கை ◆ நண்பு
- நீதிவெண்பா பாடலில் கூறப்பட்டுள்ள விலங்குகளின் பெயர்களை எழுதுங்கள்.



# பிற உயிர்களை நேசித்தல்



## தேர் கொடுத்தவர்

முத்து, பவளம், மணி இழைத்த
தேரைப் பாரடி – அதில்
மிடுக்குடனே செல்லும் அந்த
மனிதர் யாரடி?

எத்தி சையும் புகழ் மணக்கும்
பாரி தானடி – அவர்
இல்லையென்றே சொல்லிடாத
வள்ள லாமடி

சாலை ஓரம் அந்தத் தேரும்
நிற்ப தேனடி? அங்கே
சட்டென் றவரும் கீழிறங்கிப்
பார்ப்ப தென்னடி?

பற்றிப் படரக் கொம்பில் லாமல்
முல்லைக் கொடியுமே – காற்றில்
சுற்றிச் சுழன்று தவிக்கும் காட்சி
கண்டு தானடி

**கடையெழு வள்ளல்கள்**

பாரி
அதியமான்
காரி
ஓரி
ஆய்
பேகன்
நள்ளி

தேரைக் கொடியின் அருகில் கொண்டு
செல்வ தேனடி ? – அங்கே
சென்று கொடியைக் கையில் அவரும்
எடுப்ப தேனடி?

தேரின் மீது கொடியைப் படர
விடுகி றாரடி – அதன்
சிரமம் தீர்த்து மகிழ்ச்சி யோடு
நடக்கி றாரடி

முல்லைப் படரத் தேரைக் கொடுத்த
வள்ளல் பாரிபோல் – அடியே
மிகவும் நல்ல மனிதர் ஒருவர்
உண்டோ ? சொல்லடி

**இன்னும் சில வள்ளல்கள்**

கர்ணன்
சிபிச் சக்கரவர்த்தி
மனுநீதிச் சோழன்

இல்லை, இல்லை இல்லை என்றே
சொல்கி றேனடி – நாம்
எங்கு தேடிப் பார்த்திட் டாலும்
கிடைத்தி டாரடி

– அழ.வள்ளியப்பா.

## ஆசிரியர் குறிப்பு



புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922–ஆம் ஆண்டு நவம்பர் 22–ஆம் நாள் அழகப்பச் செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பாடல் தொகுப்புகள், புதினங்கள், கட்டுரை, நாடகம் போன்றவைகளை வெளியிட்டுள்ளார். இவருக்குத் தமிழ்ப் பேரவைச் செம்மல், பிள்ளைக் கவியரசு, குழந்தைக் கவிஞர், மழலைக் கவிச் செம்மல் போன்ற பட்டங்கள் கிடைத்துள்ளன. இவரது மனைவி பெயர் வள்ளியம்மை. இவர் 1989 மார்ச் 16–ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

- விடை காணலாம்.
  - முல்லைக் கொடிக்குத் தேர் அளித்த வள்ளல் பெயர் என்ன?
  - இழைத்த, மிடுக்கு என்ற சொற்களுக்கானப் பொருளை எழுதுங்கள்.
- பாடலைக் கதை வடிவில் மாற்றி எழுதுங்கள்.

  தேர் – மன்னன் உலா வருதல் – சாலை ஓரம் – முல்லைக்கொடி – இறங்குதல் – தேரில் – படரவிடுதல் – மகிழ்ச்சி அடைதல் – அவர்தான் பாரி வள்ளல்.
- கேள்வி பதில் போல் அமைந்த இப்பாடலை உரையாடல் போல எழுதுங்கள்.

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

"ராஜா! ராஜா!" அம்மாவின் குரல் கேட்டு, தோட்டத்திலிருந்து ஓடி வந்தான் ராஜா.

"கூப்பிட்டீர்களா அம்மா!" என்ற ராஜா, கைகளைப் பின்னால் மறைத்துக் கொண்டிருக்கவே.

"என்ன அது கையில்? முன்னால் நீட்டு" என்ற கற்பகத்தின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவனாய், கைகளை முன்னால் நீட்டினான்.

மூடிய அவன் கைகளுக்குள் அழகான "பொன் வண்டு!"

"உனக்கு எத்தனை முறை சொல்வது, இப்படி எல்லாம் செய்யக்கூடாது என்று?" எனக் கடிந்து கொண்டாள் கற்பகம்.



"இந்த ஒரு தடவை மட்டும் தானம்மா. இனி வண்ணத்துப்பூச்சியையோ, பொன்வண்டையோ பிடிக்க மாட்டேன்" என்றபடி வீட்டுக்குள் ஓடி விட்டான்.

அவன் அறைக்குள் அழகான கண்ணாடி டப்பாக்களில் வண்ண வண்ணப் பொன்வண்டுகள். குண்டு கண்களை உருட்டியபடி பாவமாகக் காட்சி அளித்தன.

அவற்றுக்குச் சின்ன சின்ன இலைகளைக் கிள்ளிப் போட்டு வைத்திருந்தான்.

நூலில் கட்டப்பட்ட சில வண்ணத்துப்பூச்சிகள் சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டன. ஜன்னலோரம் வளர்க்கப்பட்டிருந்த மணிபிளான்ட் கொடியில் அவை வாசம் செய்தன.

இரண்டு கிளிக் கூண்டுகள். அவற்றுள் அடைக்கப்பட்டிருந்த அழகான இரண்டு கிளிகள். கூண்டுக்குள் ஒரு சிறிய தட்டில் சிதறிய தானிய மணிகளும் பழக்கொட்டைகளும் இருந்தன.

கையில் கொண்டு வந்திருந்த பொன் வண்டையும் ஒரு சிறிய டப்பாவுக்குள் போட்டு மூடியில் சிறிய துவாரமிட்டான். அது சுவாசிக்க வேண்டுமே! அதற்கான இரையையும் அதனுள் போட்டு வைத்தான்.

எத்தனையோ தடவை சொல்லியும் அவன் திருந்துவதாக இல்லை. பள்ளிக்குச் சென்று வீடு வந்தவுடன் முதல் வேலையாகத் தோட்டத்துக்கு ஓடி விடுவான்.

உலக வன விலங்குகள் தினம் மார்ச் 3.
வன உயிர்ப் பாதுகாப்புச் சட்டம் 1972.
உலக விலங்குகள் தினம் அக்டோபர் 4.

படிப்பில் படுசுட்டியாகவே விளங்கினான். அதனால், அவ்வப்போது கண்டித்தாலும், தானாகத் திருந்துவான் என்று அவன் பெற்றோர்கள் விட்டு விட்டனர்.

அப்பா கந்தசாமி பக்கத்து ஊர் கூட்டுறவு வங்கியில் கிளார்க்காகப் பணிபுரிந்து வந்தார். தினமும் சைக்கிளில் போய் வந்து கொண்டிருந்தார்.

விடுமுறை நாட்களில் அவரது சைக்கிளை எடுத்துக் கொண்டு காடு மேடு வயல் வெளி எங்கும் சுற்றி வருவான். கண்ணில் படும் எந்தவொரு அழகான பூச்சியையும் விட்டுவைக்க மாட்டான்.

ஆனாலும் ஒரு நாள் கூட அவற்றுக்கு உணவு கொடுக்க மறக்க மாட்டான்.

ஒரு முறை அவன் வளர்க்கும் கிளி ஒன்றின் காலில் ஒரு சிறு காயம் ஏற்பட்டுத் தத்தி தத்தி நடந்தது. உடனே அதற்கு மஞ்சள் பற்றுப் போட்டு அது சுகமாகும் வரை அருகிலேயே இருந்து கவனித்து வந்தான்.

அதைக்கண்ட அவன் அப்பா கந்தசாமி. "ஏன் ராஜா,

அதை இப்படி அவஸ்தைப் படுத்துகிறாய்? பாவம் இல்லையா? அதை வெளியே பறக்கவிடு" என்றார்.

உடனே அவன், "நான்தான் இதற்கெல்லாம் வேளா வேளைக்கு உணவு கொடுக்கிறேனே. தண்ணீர் கொடுக்கிறேனே. மருந்து போடுகிறேனே. பிறகென்ன?" என்று வெடுக்கென்று பதிலுரைத்தான்.

அவன் தானாகத் திருந்தினால்தான் உண்டு என்று எண்ணியபடி அவர் சென்று விட்டார்.

அன்று சனிக்கிழமை!



வழக்கம் போலவே அப்பாவின் சைக்கிளை எடுத்துக் கொண்டு வயல்வெளிப் பக்கம் சென்று விட்டான்.

ஓர் ஓடை ஓரமாகச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஓர் அழகான பட்டாம்பூச்சியைப் பார்த்தான்.

சைக்கிளில் இருந்தபடியே அதை எட்டிப்பிடிக்கும் ஆவலில் கையை நீட்டியபோது, நிலைதடுமாறி பள்ளத்தில் விழுந்து விட்டான்.

முதுகை முட்கள் பதம் பார்த்துவிட்டிருந்தன.

கைகளிலும் முகத்திலும் ஏகப்பட்ட சிராய்ப்புகள். எழுந்திருக்க எத்தனித்தவனுக்கு அதிர்ச்சி! முடியவில்லை. கால்களை அசைக்கக்கூட முடியாதபடி வலி.

"அம்மா" என்று அலறியபடி மயங்கி விழுந்தான்.

அவன் நினைவு திரும்பி கண்விழித்துப் பார்த்தபோது, ஒரு மருத்துவமனையில் படுத்திருப்பது புரிந்தது.

எதிரில் கவலை நிரம்பிய முகத்தோடு அவன் அம்மாவும் அப்பாவும்!

அவன் வலது காலில் கட்டுப் போடப்பட்டு உயரே இருந்த வளையத்தில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது.

"அம்மா! எனக்கு என்ன ஆயிற்று? ஏன் என் காலை அசைக்க முடியவில்லை?" என்று குழப்பமுடன் கேட்டான். அதற்குள் அவன் அப்பா கந்தசாமி. "பயப்படாதே" ராஜா, உன் காலில் சிறு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. "நல்ல வேளையாகப் பயப்படும்படி ஒன்றும் ஆகவில்லை. இன்னும் ஒருவாரத்தில் வீட்டுக்கு வந்துவிடலாம்!" என்று ஆறுதல் கூறினார்.

ஒரு வார காலமும் அவன் அருகிலேயே இருவரும் இருந்து கவனித்து வந்தனர். ஆனாலும் அவனுக்குள் "தான் சிறையில் அடைக்கப் பட்டிருப்பது" போன்ற உணர்வுதான் ஏற்பட்டது.

அப்போதுதான் அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

"நம்மால் இந்த ஒரு வார காலம்கூட காலில் கட்டுப் போட்டுக் கொண்டு படுத்திருக்க முடியவில்லையே. எத்தனை உயிர்களை நான் கூண்டுக்குள் அடைத்து வைத்திருக்கிறேன்? அவை எவ்வளவு மனக்கஷ்டமடைந்திருக்கும்?"

அவன் கண்களில் கண்ணீர் அருவியாக ஓடியது.

பெற்றோரிடம்கூட ஏதும் பேசாமல், மௌனமாக அழுதான். அவனின் போக்கு அவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது.

காலில் கட்டுப் பிரிக்கப்பட்டது. மெதுவாக எழுந்து நடந்து பார்த்தான். வலி சிறிது இருந்தாலும் நடக்க முடிந்தது.

பெற்றோருடன் வீடு திரும்பியவுடன் நேராக அவனது அறைக்குச் சென்றான்.

"பார் கற்பகம்! வந்ததும் வராததுமாக உன் பையன் எங்கு போகிறான் என்று, அவன் திருந்தவே மாட்டானா?" என்று குறைபட்டுக் கொண்டார் கந்தசாமி.

அறைக்குள் சென்ற ராஜாவோ, ஒவ்வொரு டப்பாவாகத் திறந்து பார்த்தான். நல்லவேளையாக எல்லாம் உயிருடன் இருந்தன. எல்லாப்



பொன் வண்டுகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் விடுதலை செய்தான்.

கிளிக்கூண்டையும் திறந்து விட்டான். கிளிகள் சுதந்திரமாகப் பறந்தன. அதைக் கண்ட ராஜாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்! லேசாகிப்போன மனதுடன் திரும்பியபோது, அவன் பெற்றோர்கள் எதிரில் நின்றிருந்தனர். அவர்கள் கண்களிலும் கண்ணீர்! அது, மகன் திருந்தி விட்டான் என்கிற மகிழ்ச்சியில் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்!

"அப்பா, அம்மா என்னை மன்னித்து விடுங்கள். உயிர் வதைக் கூடாது என்று நீங்கள் கூறியபோதெல்லாம் கேட்காமல் இருந்து விட்டேன். இப்போது அது தவறு என்று புரிந்து கொண்டேன். இனி எந்த உயிரையும் துன்புறுத்தமாட்டேன்" என்று கண்ணீர் மல்கக் கூறினான்.

மகன் திருந்தி விட்ட மகிழ்ச்சியில் இருவரும் திக்குமுக்காடிப் போனார்கள்.

அடுத்தவன் துன்பம் ஆனந்தம்; தன் துன்பம் தர்ம சங்கடம். துன்பம் தனக்கு வந்தால் துன்பத்தின் துயரம் தெரிந்து விடும்.

## செயல்பாடுகள்

- இந்தக் கதையிலிருந்து நீங்கள் தெரிந்துகொண்ட நல்ல பண்பு எது?
- தமிழ்ச் சொற்களைக் கூறுங்கள்.
  - சைக்கிள்
  - கிளார்க்
- 'அடுத்தவன் துன்பம் ஆனந்தம் தன் துன்பம் தர்ம சங்கடம்' – இது பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள ஒரு பொன்மொழி. இதை நினைவில் கொண்டு உங்கள் வாழ்வில் நடந்த ஓர் அனுபவத்தை எழுதுங்கள்.
- உலக வனவிலங்குகள் தினம் பள்ளியில் நடைபெறுகிறது. அதற்கான,
  - முத்திரை வாக்கியங்கள்
  - சுவரொட்டி
  - நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.

## பறவைகள் பலவிதம்

பறவைகள் மனிதனுடைய வாழ்க்கையோடு இணைந்தே இருந்து வந்திருக்கின்றன. மனிதனுக்கு உணவாக, கடற்பயணங்களில் திசைக் காட்டியாக, செய்திகளைக் கொண்டுசெல்லும் தூதுவனாக உதவி புரிந்திருக்கின்றன.

வேளாண் மேம்பாட்டிற்கும் பறவைகள் பெரிதும் துணை புரிகின்றன. பறவைகள் வயல் வெளிகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான வெட்டுக்கிளி, நத்தை, சிப்பி போன்றவற்றைத் தங்கள் உணவாகக் கொள்கின்றன. இதனால் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் எண்ணிறந்த பூச்சிகள் ஒரு கட்டுப்பாட்டினுள் வைக்கப்படுகின்றன.

வண்ணத்துப்பூச்சிகள், வண்டுகள், தேனீக்கள் போன்றவை அயல் மகரந்த சேர்க்கைக்குப் பெரிதும் உதவுகின்றன. மேலும் இவைகள் பழ வகைகளை அழிக்கக் கூடிய கம்பளிப்புழு, கூட்டுப்புழு போன்றவற்றைக் கட்டுப்படுத்த வல்லன. சோளம், கம்பு போன்றவற்றை உண்ணவரும் பறவைகளின் உமிழ்நீர், பயிர் நன்கு வளர உதவுகிறது. பறவையியல் துறையின் தந்தை என்றழைக்கப்படும் 'டாக்டர் சலீம் அலியின்' கருத்துப்படி நம் நாட்டின் பொருளாதாரம் நாம் நினைப்பதைவிட அதிக அளவில் பறவைகளை

தேசியப் பறவைகள் தினம் – ஜனவரி 5





நம்பி உள்ளது. பறவையியல் என்பது 'அளவிட முடியாத ஆழம் கொண்ட ஒரு சுரங்கம். இதில் எவ்வளவு தேடுகிறாயோ அவ்வளவு கண்டுபிடிப்பாய்' என்று கூறுகிறார்.

பறவையினங்கள் பருவகால மாறுதலுக்கேற்ப இனப் பெருக்கத்திற்காகவும் உணவிற்காகவும் இடம் பெயர்ந்து செல்கின்றன. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் உள்ள ஒரு கிராமம் 'கூந்தன் குளம்'. இந்தக் கிராமத்தில் சனவரி முதல் ஆகஸ்ட் வரை கோயில் விழாக்களில் ஒலிபெருக்கி வைப்பதில்லை. வாணவேடிக்கை கிடையாது. இசைக்கருவிகள்கூட ஆக்ரோஷமாக ஒலிக்காதபடி பார்த்துக் கொள்கிறார்கள், இத்தகைய கட்டுப்பாடுகளுக்குக் காரணம் இந்த மாதங்களில்தான் சைபீரியப் பறவைகள் இங்கே வந்து தங்குகின்றன. விருந்தினர்களாக வருகை புரிந்திருக்கும் இந்தப் பறவைகளின் நிம்மதியைக் கெடுக்காமல் இருக்கத்தான் இவ்வளவு ஏற்பாடுகளும்.

சலீம் அலியின் முழுப்பெயர்
சலீம் மொய்ஜுதீன் அப்துல் அலி

இங்கு வண்ண நாரை, கூழைக்கிடா, கடல் காகம் என்ற மூன்று சைபீரியப் பறவைகளும் உள்நாட்டு வெள்ளை–கறுப்புக் கொக்குகளும் வருகின்றன. அந்தப் பறவைகள் இங்கு வருவதே கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து, வாரிசுகளை வளர்த்து அழைத்துச் செல்வதற்காகத்தான்.

பறவைகள் இந்த ஊருக்கு வருவதைப் பிரசவத்திற்கு வருவதாகவே ஊர்க்காரர்கள் நினைக்கிறார்கள். இதனால் இவற்றிற்கு ஊர் மக்களிடம் பெரும் மரியாதை உண்டு. இந்தப் பறவைகள் ஊருக்கு வருவதால் மழை பொழியும்; விளைச்சல் பெருகும் என்று மக்கள் நம்புகின்றனர். ஊர் மக்களின் இந்த நம்பிக்கை அறிவியல் ரீதியான உண்மைதான் என்று பறவையியல் ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

இந்தப் பறவைகள் அனைத்தும் குடிபெயர்வதற்கு முன்பு சில பறவைகளைக் கூந்தன் குளத்துக்கு அனுப்பி அந்த ஆண்டு மழை வருமா, வராதா என்று ஆய்வு செய்கின்றன. இந்தப் 'பைலட்' பறவைகள் மழையின் அறிகுறியை உள்ளுணர்வால் அறிகின்றன. மழை உண்டு என்று உணர்ந்தால் அந்தப் பறவைகள் வந்த இடத்திலேயே அதாவது கூந்தன் குளத்திலேயே தங்கி விடுகின்றன. இதனை ஒரு 'சிக்னலாகக்' கொண்டு மற்ற பறவைகள் இந்த ஊருக்குக் குடிபெயர்ந்து வருகின்றன. இந்தப் பறவைகள் அங்கிருந்து குடிபெயர்ந்து வரவில்லையென்றால் அந்த ஆண்டு மழை வருவது சந்தேகம்தான் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர் ஊர்மக்கள்.

நம்முடைய இடத்துக்கு விருந்தினர்களாக வரும் பறவைகளை வரவேற்று வசதிகள் செய்து தரவேண்டும். நீர் நிலைகள் அமைத்தல், புதிய மரங்களை நடுதல் அவைகளின் இன விருத்திக்குப் பாதுகாப்புத் தருதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலாப்பயணிகள் வந்து போக சாலை வசதிகளும் தங்கும் வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த உதயமார்த்தாண்டம், நாச்சிகுளம், செறுபனையூர் ஆகிய கிராமங்களை ஒட்டி உள்ள பறவைகள் சரணாலயத்தின் இயற்கைச் சூழலைப் பாதிக்காத வகையில், இறுதி யாத்திரைக்கு மனித சடலங்களைத் தூக்கிச் செல்லும்போதுகூட சம்பிரதாயமாக எழுப்பப்படும் தாரை தப்பட்டை ஒலிகளை எழுப்பாமலும் வெடிகளை வெடிக்காமலும் பறவைகளுக்காக அமைதியாகச் செல்கின்றனர்.

**கேரளத்திலுள்ள சில பறவைகள் சரணாலயங்கள்**

குமரகம்
மங்களவனம்
பாதிரா மணல்
தட்டேக்காடு
கடலுண்டி

**தமிழ்நாட்டில் உள்ள சில பறவைகள் சரணாலயங்கள்**

கூந்தன்குளம்
வேடந்தாங்கல்
உதய மார்த்தாண்டபுரம்
வெள்ளோடு

'காக்கை குருவி எங்கள் சாதி—நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடினார் பாரதி. பகுத்தறிவு பெற்ற மனிதர்கள் இந்தப் பறவைகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம் உள்ளன. காடுகளும் மலைகளும் நதிகளும் இயற்கைத்தாயின் தொட்டில்கள். அழகிய சுற்றுலாத் தலங்கள் மனதைச் செம்மைப் படுத்தும் திறந்தவெளிப் பள்ளிகள். பறவைகளும் விலங்குகளும் இயற்கையின் செல்லப் பிள்ளைகள். இந்தச் செல்லப் பிள்ளைகளைப் பாதுகாப்போம்! பராமரிப்போம்!

–பி.கே.மனோகரன்.

## செயல்பாடுகள்

◈ வாசித்துக் கண்டுபிடிப்போம்.

- பறவையியல் துறையின் தந்தை................
- கூந்தன் குளத்திற்கு வரும் சைபீரியப் பறவைகள்
  - .........................
  - .........................
  - .........................
- 'பைலட்' பறவைகள் எனப்படுபவை .........................
- 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று பாடிய புலவர் ......................
- காடுகளும் மலைகளும் நதிகளும் ................... தொட்டில்கள்.
- பறவைகளும் விலங்குகளும் ...................... செல்லப் பிள்ளைகள்.

◈ பொருள் காணலாம்.

- ஆக்ரோஷம்
- சரணாலயம்

- சடலம்
- சம்பிரதாயம்
- ஆய்வு

◈ சொற்களைப் பிரித்தெழுதுங்கள்.

- பல்லாயிரம்
- பறவையியல்

◈ ஐ.சி.டி உதவியுடன் படங்களைச் சேகரித்துத் தொகுப்பாக வெளியிடுங்கள்.

◈ நாம் எப்போதும் காணும் உள்நாட்டுப் பறவைகளையும் அவை பற்றிய செய்திகளையும் சேகரியுங்கள். வெளியிடுங்கள்.

◈ பறவை மனிதன் கூந்தன் குளம் பால்பாண்டி அவர்களை நேர் காண்பதற்கான வினாநிரல் தயார் செய்யுங்கள்.

◈ பள்ளியில் நடைபெறும் பறவைகள் பாதுகாப்புத் தினவிழாவில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

◈ பறவைகளால் ஏற்படும் நன்மைகள் குறித்துக் கலந்துரையாடிக் கருத்துகளைத் தொகுத்து வெளியிடுங்கள்.

- பறவைகளின் எச்சம் உரமாகப் பயன்படுகிறது.
- 
- 



## அலகு 5

# கையிலே கலைவண்ணம்



மண்ணின் மைந்தர்களாம் கிராமப்புற மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்ததே பழமொழிகள். முன்னோர்தம் இயற்கையோடு இயைந்த வாழ்வுதான் இவ்வளமைக்குக் காரணம். நாட்டுப்புறக் கலைகள், பண்டிகைகள் மற்றும் ஓவியங்கள் போன்ற கலைகளும் நமது பண்பாட்டினை எடுத்தியம்புகின்றன.

# மண்வாசனை



## கரிசல் காட்டுப் புதுமை

அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மனித வாழ்க்கையும் சுற்றுப்புறங்களும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. அறிவியல் வளர்ச்சியை மிக வேகமான வளர்ச்சி எனலாம். ஒரு காலத்தில் கால்நடையாகப் பயணித்து வந்த மனிதன் பின்னர் காளை வண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் பயணிக்கத் தொடங்கினான். பின்னர் பேருந்து, கார், ரயில், கப்பல், விமானம் எனப் போக்குவரத்து வாகனங்களும் வசதிகளும் அதிகரித்தன. இதனைக் கருத்தில் கொண்டு உருவானது இந்நாட்டுப்புறப் பாடல்.

வண்டி வருகுதடி
வடுகப்பட்டி முந்தலிலே
தந்தி வந்து பேசுதடி
தட்டாம் பாறை டேஷனுல
பெரிய துரை காலத்திலே
பேய்க் குதிரை சவாரி
சின்னத்துரை காலத்திலே
சிம்மம் போல மோட்டார்
கோச்சு மேலே கோச்சு வர
கொளும்புக் கோச்சு மேலே வர

நீல வர்ணக் கோச்சியிலே
நிச்சயமா நான் வாரேன்
ஆத்துல தண்ணிவர
ஆணும் பெண்ணும் அவதிப்பட
தூத்துக்குடி வெள்ளைக்காரன்
துணிஞ்சிட்டானே பாலங் கட்ட
கோணக் கோண ரயில் வண்டி
குமரிப் புள்ளே போகும் வண்டி
திருக்குப் போட்டுப் போகுதையா
திருமங்கலம் டேஷனுக்கு.

– நா. வானமாமலை

## செயல்பாடுகள்

- அன்றும் இன்றும் போக்குவரத்து முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டிப் பட்டியலிடுங்கள்.
- நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்துத் தொகுப்பாக்குங்கள்.
  - தாலாட்டு
  - தொழில்
- சிறுகுறிப்பு எழுதுங்கள்.
  - தந்தி
  - ரயில் வண்டி
  - ஜமீன்
- பிறமொழிச்சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
  - டேஷன்
  - ரயில்
  - கோச்சு
  - ஜமீன்

## மூதாட்டியின் கல்வீச்சு

ராஜகிரி இளவரசன் விஜயனும் அமைச்சர் மதனனும் தங்கள் குதிரைகளில் ஏறி அமர்ந்து ஒரு கிராமத்தின் வழியே சென்று கொண்டிருந்தனர்.

காவலர்கள் ஒரு ரதத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பாகப் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

சாலையின் ஓரத்தில் ஏராளமான மரங்கள் இருந்தன. அவற்றில் ஒரு சில மாமரங்களும் இருந்தன. அம்மாமரங்களில் நிறைய பழங்கள் பழுத்துத் தொங்கின. அப்பொழுது, அரசன் வந்து கொண்டிருப்பதை அறியாமல் ஒரு மூதாட்டி, ஒரு மாமரத்தின் மேல் ஒவ்வொரு கல்லாக எறிந்து கொண்டிருந்தாள்.



அந்த நேரத்தில் இளவரசன் விஜயனின் குதிரை அந்த இடத்திற்கு வந்தது. அப்பொழுது அந்த மூதாட்டி எறிந்த கற்களில் ஒன்று விஜயனின் தோளில் விழுந்தது.

திடுக்கிட்டுக் குதிரையை நிறுத்தினான் இளவரசன். கல் ஒன்று அவனைத் தாக்கியதை அவன் பின்னே பாதுகாப்பிற்காக ரதத்தில் வந்து கொண்டிருந்த பாதுகாப்பு வீரர்கள் பார்த்தனர். உடனே ரதத்தை நிறுத்தி விட்டு ஓடி வந்தனர்.

யார் இந்தக் கல்லை எறிந்தது? என்று கோபமாகக் கத்தினான் விஜயன்.

அப்பொழுது ஒரு பாதுகாப்பு வீரன், இளவரசே! அதோ அந்த மூதாட்டிதான் தங்கள் மீது கல்லை வீசி எறிந்தாள். தங்கள் மீது அவளுக்கு என்ன வெறுப்போ தெரியவில்லை. தாங்கள் உத்தரவு கொடுத்தால் அவளை இங்கு இழுத்து வருகிறோம்! என்றான்.

'உடனே இழுத்து வந்து என் முன்னே நிறுத்துங்கள்!' என்று தோளைத் தடவிக் கொண்டே ஆத்திரத்தில் வெடித்தான் இளவரசன்.

சிறிது நேரத்தில் பாதுகாப்பு வீரர்கள் அந்த மூதாட்டியை இழுத்துக் கொண்டு வந்து விஜயனின் முன்னே நிறுத்தினர்.

அந்த மூதாட்டி இளவரசனைப் பார்த்ததும் நடுநடுங்கினாள்.

'மூதாட்டியே! நீ என் மீது கல் எறிந்ததன் காரணம் என்ன?' என்று கேட்டான் விஜயன்.

'மன்னவா! நான் தங்கள் மீது கல் எறியவில்லை. நான் மிகவும் ஏழை. என் ஒரே மகனும் வேலை எதுவும் இல்லாமல் வருத்தத்தில் இருக்கிறான். அவன் சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன. வீட்டில் ஓர் அரிசி மணி கூட இல்லை. அவன் பசி பொறுக்க மாட்டான். சாப்பாடு இல்லாமல் துவண்டுவிட்டான்.



அவன் பசியைத் தீர்க்க இம்மரத்தில் உள்ள மாம்பழங்கள் சிலவற்றைக் கொண்டுபோய்க் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் மாமரங்களின் மீது

கற்களை வீசிக் கொண்டிருந்தேன். ஒரு பழம்கூட கீழே விழவில்லை. அப்படி எறிந்த கற்களில் ஒன்றுதான் தங்களின் மீது பட்டுவிட்டது. அதற்காக நான் வருந்துகிறேன், என்றாள் மூதாட்டி.

இவற்றைக் கேட்ட விஜயனின் மனம் இளகிவிட்டது.



உடனே தன் இடுப்பில் சொருகப்பட்டிருந்த ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பண முடிப்பை எடுத்து மூதாட்டியின் கையில் கொடுத்தான்.

'தாயே! தங்கள் நிலை தெரியாமல் நான் சற்றுக் கோபம் கொண்டு விட்டேன். மன்னித்து விடுங்கள்' என்று சொல்லிவிட்டுப் பாதுகாப்பு வீரர்கள் பக்கம் திரும்பி 'வீரர்களே! இந்த அம்மாவிற்குத் தேவையான பழங்களைப் பறித்துக் கொடுத்து ரதத்தில் ஏற்றி அவர் இல்லத்தில் கொண்டு விட்டுவிட்டு வாருங்கள்' என்றான்.

அந்த மூதாட்டி விஜயனை வாயார வாழ்த்திவிட்டுப் பாதுகாப்பு வீரர்களுடன் சென்றாள்.

இதுவரை அமைதியுடன் இருந்த அமைச்சர் இளவரசரைப் பார்த்து 'இளவரசே! அந்த மூதாட்டி தெரிந்து செய்தாளோ? தெரியாமல் செய்தாளோ? கற்களில் ஒன்று உங்கள் மீது பட்டுவிட்டது. அதற்குத் தண்டனை கொடுத்தே ஆக வேண்டும். அதைவிட்டுப் பேருதவி செய்து அனுப்புகிறீர்களே, என்னால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை' என்றார்.

அதைக் கேட்ட விஜயன் 'அமைச்சரே! மரத்திற்கும் உயிர் உள்ளது. அப்படி இருந்தும் தன் மீது கல்லெறிபவர்களுக்கு அது பழத்தைக் கொடுத்து உதவுகிறது. நானோ அற்ப மனிதன். உயிர் உள்ளவரைதான் எனக்கு மதிப்பு. இப்படி ஓர் அற்பப் பிறவியான நான் என் மீது கல்பட்ட காரணமாய் இந்த மூதாட்டிக்கு உதவக் கூடாதா?' என்று திரும்பக் கேட்டான்.

அவனது சொல் அமைச்சரையே திருத்தி மனிதனாக்கி விட்டது.

## செயல்பாடுகள்

- பொருளைக் கண்டுபிடியுங்கள்.
  - மூதாட்டி
  - துவண்டு
  - இல்லம்
  - ரதம்

- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - திடுக்கிட்டு
  - நடு நடுங்கி
- பிரித்தெழுதுங்கள்.
  - பேருதவி
  - கல்லெறிபவர்
  - இளவரசர்

## சிறுதுளி பெரு வெள்ளம்

ஒரு பெரியவர் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்குகிறார். வாங்கிய பின் கடைக்காரர் பொருள்களுக்கான மொத்த விலையைக் கூறுகிறார். பெரியவர் தன்னிடமிருந்த பணத்தை எண்ணிப் பார்க்கிறார். பத்துக் காசு குறைவு. அதைக் கடைக்காரரிடம் கூறுகிறார். அதைக் கேட்ட கடைக்காரர்.

"ஐயா, பத்துக் காசு என்பது மிகமிகச் சிறிய தொகைதான். ஆனால் இப்படியே பத்து பேர் சொன்னால் எனக்கு அது ஒரு பெருந்தொகை ஆகிவிடும் அல்லவா?" என்று சொன்னார். கூடவே "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற பழமொழியையும் கூறினார். அவர் கூறியது உண்மை தானே!



மழைக்காலத்தில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவந்து நாடு நகரங்களைச் சீர்குலைத்து விடுவதுண்டு. ஆனால், இந்தப் பெருவெள்ளம் அப்படியே வானத்திலிருந்து அருவிபோல் பாய்ந்து வருவது அல்ல. சிறுசிறு துளிகளாகப் பெய்யும் மழைநீர்தான் ஒன்று கலந்து பெருவெள்ளமாகப் பெருக்கெடுக்கிறது. இதனடிப்படையில் எழுந்ததுதான் இப்பழமொழி.

இப்பழமொழி இன்னொரு நல்ல பழக்கத்தையும் நமக்கு எடுத்துரைக்கிறது. அதுதான் சிறுசேமிப்பு. அவ்வப்போது நமக்குக் கிடைக்கின்ற சிறுசிறு தொகையை நாம் சேமித்து வைக்க வேண்டும். பின்னொரு நாள் அதை எண்ணிப் பார்த்தால் நம்மை வியக்க வைக்கும் ஒரு பெருந்தொகை சேர்ந்திருப்பதைக் காணமுடியும். சில இக்கட்டான நேரங்களில் இத்தொகையே நமக்குக் கைக் கொடுத்து உதவும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 'எதையும் சிறியன' என்று எண்ணாதிருப்போம்!.

– கவிஞர் த. துரைசிங்கம்

## செயல்பாடுகள்

- பணத்தை மையமாகக்கொண்ட பழமொழிகளைத் திரட்டி எழுதுங்கள்.
- உங்கள் பகுதியிலுள்ள அஞ்சலகத்திற்குச் சென்று அஞ்சலகச் சிறுசேமிப்புத் திட்டம் பற்றி அலுவலரிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- "சிறுதுளி பெருவெள்ளம்" பழமொழியின் பொருளைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதனடிப்படையில் உங்கள் வாழ்வில் நடந்த அனுபவத்தை எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த ஐந்து பழமொழிகளைக் குறிப்பிடுங்கள்.
- "பேராசை பெருநஷ்டம்" இப்பழமொழியின் அடிப்படையில் ஒரு கதை எழுதுங்கள்.



# பேசும் தூரிகை



## எண்ணக் கனவுகள்

தமிழன் மரபோ தரணியோர் போற்றும்
அமிழ்தாய் விளைந்ததே ஆழ்ந்தே – உமிழ்ந்த
சிறப்பாய் உருவான சித்திரம் எங்கும்
அறமும் உரைத்திடும் அன்பு!

எண்ணும் எழுத்தும் எடுத்தே இயம்பிடும்
கண்ணெனக் காத்தே கலைநயம் – வண்ணமாய்
நெஞ்சில் திளைத்துமே நிற்குதே
எண்ணக் கனவின் எழுத்து!

சித்திரத்தில் உள்ள செந்தா மரையுமே
ஒத்திருந்த ஒற்றை முகமுமே – எத்திறமும்
வித்தாய் விளைந்தே விளித்துமே விண்டதே
முத்தான ராமன் முகம்!

குகையில் வரைந்தே குவிந்திட்ட காட்சி
பகைக்கே அஞ்சி பதுங்கி – முகையின்
வகையாய் முகிழ்ந்த வளர்ச்சி உலகில்
நகையாய் மலர்ந்தே நவின்று!

ஆதியில் மாந்தரும் ஆக்கிய ஓவியம்
பாதிப் படிந்ததே பாறையில் – சோதியாய்
முடித்த ஒளிர்ந்திட்ட பாவையாய்
சேதியும் தந்ததே சேர்ந்து!

குறிப்புப் பொருளாய் குறித்த படமும்
அறிவிப்பும் செய்திடும் ஆற்றலை ஏறிய
சித்திரம் எல்லாம் சிறப்பாகச் சொல்லுதே
மொத்தமாய் கண்ணில் மொழிந்து

– முனைவர் அ. பாரதிராணி

## செயல்பாடுகள்

- பாடலைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுங்கள்.
- இப்பாடலில் வரும் எதுகை சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள பாடலை முழுமையாக்குங்கள்.

சித்தன்ன வாசல் ஓவியமாம்
சிந்தையைக் கவரும் ஓவியமாம்
சிந்து நதிக்கரை காலம் தொட்டு
சித்திரம் வரையும் விசித்திரமாம்
......................................................................
......................................................................
......................................................................
......................................................................

(வண்ணம் மிளிரும், சிந்தையில் ஆயிரம், காவியம் சொல்லும், கண்ணைக் கவரும்.)

## சிறந்த ஓவியம்

அறிவு நுட்பம் மிக்க அரசன் ஒருவனைக் காண புகழ் பெற்ற ஓவியர்கள் இருவர் வந்தனர். அரசன் இருவரையும் வரவேற்று உபசரித்தான்.

"அரசே! தங்கள் அறிவுக் கூர்மையைக் கேள்விப்பட்டு இங்கு வந்தோம். எங்கள் இருவரில் யார் சிறந்த ஓவியர்? என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்" என்றான் அவர்களில் ஒருவன்.

இதைக் கேட்ட அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.





"உங்கள் இருவருக்கும் அரண்மனையில் தனி அறை தரப்படும். நீங்கள் விரும்பும் ஓவியத்தை அங்கே வரையலாம்." "எந்த ஓவியம் சிறப்பாக உள்ளதோ அவரே சிறந்த ஓவியராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். ஒரு வாரத்திற்குள் உங்கள் வேலையை முடித்துவிட வேண்டும்" என்றான்.

இருவரும் தங்கள் திறமை அனைத்தையும் காட்டி ஓவியம் வரைந்தனர்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அரசன் தன் சுற்றத்தினர் சூழ முதலாமவரின் ஓவியத்தைப் பார்க்க வந்தார்.

ஓவியத்தை மறைத்திருந்த திரைச்சீலையை விலக்கினான் ஓவியன். அங்கே பலவகையான பழங்கள் தட்டில் வைக்கப்பட்டு இருப்பதைப் போல ஓவியம் வரையப்பட்டு இருந்தது. ஒருகணம் எல்லோரும் உண்மையான பழம் என்றே நினைத்தனர்.

அங்கே பறந்து வந்தது பறவை ஒன்று. அந்த ஓவியத்தை உண்மையான பழம் என நினைத்துக் கொத்தியது. பிறகு ஏமாற்றத்துடன் பறந்து சென்றது.

பறவையே ஏமாறும்படி அழகான படம் வரைந்த அந்த ஓவியனை அரசன் மிகவும் பாராட்டினான்.

பிறகு எல்லோரும் அடுத்த ஓவியன் வரைந்திருந்த அறைக்குச் சென்றனர். அங்கும் ஓவியத்தை மறைத்துக் கொண்டு திரைச்சீலைத் தொங்கியது. அரசன் திரைச்சீலையை நீக்கும்படிச் சொன்னான்.

அதற்கு இரண்டாவது ஓவியன், "அரசே! பழத்தட்டுப் படம் வரைந்த ஓவியரே இந்தத் திரைச்சீலையை நீக்கட்டும். நான் வரைந்த ஓவியத்தை எல்லோருக்கும் காட்டட்டும்" என்றான்.



முதலாம் ஓவியன் பெருமையாகத் திரைச்சீலையை நீக்க முயன்றான். ஆனால், அவனால் முடியவில்லை.

திரைச்சீலைதான் ஓவியமாக வரையப்பட்டு இருந்தது. முதல் ஓவியன் தான் ஏமாந்ததை அறிந்து அசடு வழிய நின்றான்.

ஓவியரையே ஏமாற்றக் கூடிய ஓவியம் வரைந்த இந்த ஓவியரே சிறந்தவர் என்று தீர்ப்பளித்தான் மன்னன்.

– எஸ்.லீலா.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துப் புதிய சொற்களைக் கண்டறிந்து பொருள் எழுதுங்கள்.
- பிரித்தெழுதுக.
  - திரைச்சீலை –
  - பழத்தட்டு –
  - தேர்ந்தெடுக்க –
- கதையை வாசித்து உரையாடல் வடிவில் மாற்றி எழுதுங்கள்.
- ஆசிரியர் தரும் தலைப்புக்கேற்றவாறு ஓவியங்கள் வரைந்து ஒரு கண்காட்சி நடத்துங்கள்.
  - ஓவியக் கண்காட்சிக்கான நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.

## இந்திய கார்ட்டூன் உலகின் தந்தை!

"சார், கேசவ் கணக்குப் போடல்ல சார்" என்றான் ஒரு மாணவன்.



"கேசவ், இங்கே வா... ஏன் போடல்ல," என்ற ஆசிரியர் அவனுடைய வீட்டுக் கணக்கு நோட்டை வாங்கிப் பார்த்தார். உடனே அவருக்கு ஆத்திரம் வந்தது. ஏன் தெரியுமா?

அந்த நோட்டில் பக்கத்துக்குப் பக்கம் ஒரே கேலிச் சித்திரங்களாக வரைந்து தள்ளியிருந்தான் கேசவ்.

"ஏண்டா இப்படி நோட்டை வீணடித்தாய்?" என்று அதட்டினார் ஆசிரியர். கேசவிடம் பதில் இல்லை. எனவே அவர், "இப்படி யெல்லாம் கேட்டால் நீ சரிப்பட மாட்டாய். உன் அப்பாவிடம் நான் பேசிக்கிறேன்.. போய் உட்கார்..." என்று அவனை அனுப்பிவிட்டார்.

அன்று மாலை ஆசிரியர் கேசவ் வீட்டுக்குச் சென்றுவிட்டார். நோட்டைக் காட்டிப் புகார் செய்தார். கேசவ் கல்வியில் கவனமின்றி இப்படி இருக்கிறானே என்று கவலைப்பட்டார் அப்பா. அவனைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார்.

மகனை அங்கிருந்து அனுப்பிய அப்பா, "ஐயா, இந்தப் படங்களை உண்மையில் என் மகன்தான் வரைந்தானா...? நன்றாகத் தெரியுமா உங்களுக்கு..?" என்று ஆசிரியரிடம் கேட்டார்.

"ஆமாம். எல்லாம் அவன் கிறுக்கியவை தான்," என்றார் ஆசிரியர்.

"இதெல்லாம் கிறுக்கல் இல்லை சார்.... இவற்றில், ஒரு தலைசிறந்த கார்ட்டூனிஸ்டுக்குரிய ஸ்ட்ரோக்குகள் விழுந்துள்ளன... இத்தனை திறமை இருக்கிறதா என் மகனிடம்..."! என்று அதிசயித்தார் கேசவின் அப்பா.

ஆசிரியர் சென்றபிறகு மகனை அழைத்தார். "கேசவ், நன்றாகப் படி; அத்துடன் கார்ட்டூன்களையும் நிறையப் போட்டுப் பழகு; நீ சிறந்த கார்ட்டூனிஸ்ட்டாக வரலாம்" என்று ஊக்கப்படுத்தினார்.

அந்த கேசவ் தான், 'இந்தியக் கார்ட்டூன் உலகின் தந்தை' எனப்படும் சங்கர். நமது நாட்டின் தலைசிறந்த கார்ட்டூனிஸ்ட்டாக மட்டுமல்லாது சிறந்த குழந்தை எழுத்தாளராகவும் சங்கர் விளங்கினார். அவருடைய முழுப்பெயர் 'கேசவ் சங்கர் பிள்ளை.' இவர் 'சங்கர்' என்ற பெயரில் பிரபலம் அடைந்தார்.

சங்கர் கேரளத்தில் உள்ள 'காயம்குளத்தில்' 1902–ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி பிறந்தார். கல்லூரி படிப்புக்குப்பின் சங்கர் பம்பாய் சென்றார். அங்கு மொரார்ஜி தேசாயின் செயலர் ஆனார். தனக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் சங்கர் கார்ட்டூன்களை வரைந்தார். அவை 'பாம்பே க்ரானிக்' ஏட்டில் வெளியாயின. அதன் மூலம் அவர் பிரபலம் அடைந்தார்.

டில்லியிலிருந்து வெளிவந்த 'இந்துஸ்தான் டைம்ஸ், என்ற நாளிதழின் ஆசிரியர் சங்கரைத் தனது பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட்டாக நியமித்துக் கொண்டார். இந்தியச் செய்தித்தாளின் முதல் முழுநேர கார்ட்டூனிஸ்ட் என்ற பெருமை அவரை நாடி வந்தது. விடுதலைப் போராட்டம் பற்றிய அவருடைய கேலிச் சித்திரங்கள் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தின.

1948–இல் அவர் 'சங்கர்ஸ் வீக்லி' என்ற பத்திரிகையைத் துவங்கினார். அதை நேருஜி தான் துவங்கி வைத்தார். அப்போது அவர் 'சங்கர் என்னை மறந்து விடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டார். அதன் பிறகு சங்கர் நேருஜிக்கு, நேருஜியைப் பற்றிய நிறைய கேலிச் சித்திரங்களை வரையத் தொடங்கினார். குழந்தைகளிடம் இருந்த அன்பை அவரது கார்ட்டூன்கள் பிரதிபலித்தன. சங்கர் 1975–இல் தனது 'சங்கர்ஸ் வீக்லியை' நிறுத்தி விட்டார்.

குழந்தைகளிடம் ஓவியத் திறமையை ஊக்குவிப்பதற்காகச் சங்கர் 1953–இல் ஒரு சர்வதேச ஓவியப் போட்டியை நடத்தினார். அந்தந்த

நாட்டில் குறிப்பிட்ட இடத்தில் குழந்தைகள் ஒன்றாகக் கூடி அமர்ந்து படங்களை வரைந்தனர். அதன் வெற்றியைக் கண்ட சங்கர் ஆண்டுதோறும் அந்தப் போட்டியை நடத்தினார். இப்போதும் அது நடைபெற்று வருகிறது.

குழந்தைகளுக்காகச் சங்கர் ஆற்றிய மூன்று பணிகளை யாருமே மறந்துவிட முடியாது. 1965–இல் 'சங்கர்ஸ் டால் மியூசியம் அதாவது பொம்மைகள் அருங்காட்சியகம்' ஒன்றை அமைத்தார். அதில் எண்பது நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் அதிகமான பொம்மைகள் உள்ளன .

அடுத்ததாகக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் பயன்படக் கூடிய புத்தகங்களை அச்சிடுவதற்காகச் 'சில்ட்ரன்ஸ் புக் ட்ரஸ்ட்' என்ற நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தினார்.

மூன்றாவதாக, 1967–இல் நாட்டிலேயே மிகப் பெரிய 'குழந்தைகள் நூலகம்' ஒன்றை நிறுவினார். அதில் இருபத்திரண்டு வெளிநாட்டு மற்றும் பதினொன்று இந்திய மொழிகளில், பதினாறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்காக ஏறத்தாழ இருபதாயிரம் புத்தகங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

சங்கர் தனது இறுதிக்காலம்வரையில் இந்த மூன்று அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு தலைசிறந்த குழந்தை எழுத்தாளர் ஆவார். ஏராளமான சிறுவர் நூல்களை எழுதியுள்ளார்.

அவருடைய அரும்பணியைப் பாராட்டி, நமது பாரத அரசு அவருக்குப் பத்மஸ்ரீ, பத்மபூஷன் மற்றும் பத்மவிபூஷன் ஆகிய உயர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

1989–ஆம் ஆண்டு டிசம்பர் 26–ஆம் நாள் சங்கர் மறைந்தார்.

– ஜானகி மணாளன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்களை உருவாக்குங்கள்.
- ஓவியர் சங்கர் பெற்ற விருதுகளை எழுதுங்கள்.
- ஓவியர் சங்கர் எந்தப் பத்திரிகையில் பணிபுரிந்தார்?
- குழந்தைகளுக்காக அவர் ஏற்படுத்திய நிறுவனம் எது?
- குறிப்பு எழுதுங்கள்.
    - சங்கர்ஸ் டால் மியூசியம்
    - சில்ட்ரன்ஸ் புக் டிரஸ்ட்
    - சில்ட்ரன்ஸ் லைப்ரரி

### மதிப்பிடலாம்

- கார்ட்டூன் படம் மற்றும் ஓவியக் கலையில் புகழ்பெற்ற வேறு சில கலைஞர்களின் பெயர்களை இணையதளங்களைப் பயன்படுத்திக் கண்டுபிடியுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெறவுள்ள ஓர் ஓவியப் போட்டிக்கான சுவரொட்டியைத் தயாரியுங்கள்.



# விழாக்களும் பண்பாடும்



## பண்டிகைகள் பலவிதம்

பழம்பெரும் பூமியாம் எம்
பாரத பூமிதனில்
பல்வேறு மொழிகள்
பல்வேறு மதங்கள்
பல்வேறு இனத்தினர்
பகைமை மறந்து
பண்புடன் வாழ
பாலமாக இருக்கும்
பண்டிகைகள் பலவிதம்...

நித்திரை நீங்கி முத்திரை பதிக்கும்
சித்திரை மகளை வரவேற்கும் விழா!

ஆற்றுநீர் பெருக்கெடுக்க
ஆடிப்பட்டம் தேடிவிதைக்க
ஆடிப்பெருக்கு விழா!

எண்ணங்களுக்கு நல்
வண்ணங்கள் பூசி மகிழும்
வண்ணத்திருவிழா ஹோலி!

உணவுக்கு ஒரு விழா
உழவனுக்கு அது பெருவிழா
உழவர் திருநாளாம் பொங்கல்!

தீராத பகை வெறுப்பு நீங்கி
தித்திக்கும் இனிப்புடன் உறவாட
தீபாவளிப் பண்டிகை!

அன்பெனும் மழையிலே இந்த
அகிலமது நனையவே தோன்றிய
அதிரூபனுக்குக் கிறிஸ்துமஸ் விழா!

அனுதினமும் தொழுதிட
அருள்புரியும் அல்லாவுக்கு
ஆத்மார்த்தமாக ரம்சான் விழா!

பாமரர்களுக்குப்
பரவசம் அள்ளித்தரும்
பகுத்தறிவாளருக்குப்
பண்பாடு சொல்லித் தரும்
பண்டிகைகள் பலவிதம்...

சாதி மத பேதமின்றியே
நீதிநெறி வேதமுடன்
ஊரும் உறவும் ஒன்றுகூடி
உற்சாகம் தொற்றிக்கொள்ள
சான்றோர் வாழும் நற்
சமுதாயம் வேண்டும் என
தினம் தினம் பண்பாடுவோம் !
விதம் விதமாய்க் கொண்டாடுவோம்!

– வெ.ஜெயலட்சுமி

## செயல்பாடுகள்

- பாடலில் கூறப்பட்டுள்ள பண்டிகைகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- புதிய சொற்களைக் கண்டறிந்து பொருள் கூறுங்கள்.
    -
    -
    -
    -

◈ சொல் விளையாட்டு

பண்டிகை கொண்டாட்டங்களின்போது நாம் அனைவரும் உற்சாகத்துடன் இருப்போம் அல்லவா? அதைக் குறிப்பிடும் ஐந்து சொற்களைக் கண்டறியுங்கள்.

- | ஆ | | ந் | | |
  |---|---|---|---|---|

- | சி | | | பு |
  |---|---|---|---|

- | ம | | | | |
  |---|---|---|---|---|

- | | ன் | ப | |
  |---|---|---|---|

- | கு | | க | | ம் |
  |---|---|---|---|---|

◈ சரியானவற்றை இணையுங்கள்.

- வண்ணத்திருவிழா – பொங்கல் விழா
- தித்திக்கும் பண்டிகை – ஹோலி
- ஆடிப்பட்ட விழா – கிறிஸ்துமஸ்
- உணவுக்கு ஒரு விழா – ரம்சான் விழா
- அதிரூபனுக்கான விழா – தீபாவளி
- அல்லாவுக்கான விழா – ஆடிப்பெருக்கு விழா

## வண்ணங்களின் திருவிழா

கிராமத்திலோ, நகரத்திலோ நீங்கள் எங்கு வசிப்பவர் ஆனாலும் சரி. இளவேனிற் காலத்தில் – மார்ச் மாதத்தில் அக்கம் பக்கம் பார்த்துத்தான் தெருவில் நடமாட வேண்டும். கவனமில்லாமல் மனம் போனபடி நடந்தால்... பக்கத்துப் பால்கனி, மேல்மாடி அல்லது ஏதாவதொரு மூலையிலிருந்து சாயத்தண்ணீர் நிரம்பிய ஒரு பலூன் உங்கள் மீது வந்து விழும்! பலூன் உடைந்து, உங்கள் உடையெல்லாம் நனைந்துவிடும் அல்லது யாராவது பக்கத்தில் சாயத் தண்ணீரைப் பீச்சாங்குழலில் நிரப்பி உங்கள் மீது குறிவைத்துப் பாய்ச்சலாம். நீங்கள் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தால், ஜன்னல்களை மூடிவிடுவது நல்லது. இல்லாவிடில், சாலை ஓரங்களில் நின்று கொண்டு, போகிற வருகிற பஸ்களின்மீது சாயநீர் நிரப்பிய பலூன்களை அடிக்கும் சிறுவர்களால் உங்கள் உடைகள் முழுவதும் வண்ணச்சாயம் தோய்த்தெடுத்தது போலாகிவிடும்.



இதுதான் ஹோலிப் பண்டிகை! இருந்தாலும், ஹோலிப் பண்டிகை எல்லாரும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் ஒரு பண்டிகை என்பதால்,

அன்று யார் எது செய்தாலும் தவறாகாது. ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொள்ளவும் ஏதாவது வருத்தங்கள் இருந்தால் பேசித்தீர்த்து, மறந்து மன்னித்து விடுவதற்கும் ஏற்ற நாள் இது. இந்நாளில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லாருடைய உடம்பும் உடைகளும் வண்ண நீரில் நனைந்திருக்கும். முகமெல்லாம் வண்ணப்பொடி பூசப்பட்டிருக்கும். எல்லா சாலைகளிலும் தம்பட்டங்களும் ஜால்ராக்களும் ஒலிக்க ஹோலிப் பாட்டுகள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். ஒருவர் மீது ஒருவர் வண்ணச்சாயம் பூசுவார்கள். கட்டித் தழுவி வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வார்கள். சிறு தெருக்களில் கூட வண்ணமயமான காற்று மூட்டம் காணப்படும். பாட்டுகள் எங்கும் உரத்து முழங்கும்.



இதுதான்ஹோலி, ஹோலி அடா!
அன்னை ஹோலி ஆசிர்வதிப்பாள்!
ஆயிரம் ஆண்டுகள் அனைவரும் வாழவே!

வட இந்தியாவின் எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் இத்தகைய ஹோலிப்பண்டிகைக் காட்சிகளைக் காணலாம். தீபாவளியையும் தசராவையும் போலவே, ஹோலி மிக முக்கியமான பண்டிகையாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. நாட்டின் தெற்கு மாநிலங்களின் சில பகுதிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் கூட ஹோலிப் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடுவார்கள். இந்த நாளில் பெரியோர், சிறியோர், ஏழை, பணக்காரர் எல்லோரும் சரிசமமேயாவர்.

ஹோலிப் பண்டிகை பற்றி முதலில் குறிப்பிட வேண்டியது – இது வசந்த காலத்தில் வருவது. எங்கும் புதுமலர்ச்சி ஏற்படுவதைக் குறிக்கிறது. மரங்களில் புது இலைகள் துளிர்விட்டுப் பசுமையாகக் காட்சி தரும். கடுகுச் செடிகளில் பூக்கள் நிறைந்திருக்கும். தோட்டங்களும் பூங்காக்களும் பசுமைநிறத்துடன் கண்கொள்ளாக்காட்சி தரும். குளிருக்குப் பயந்து வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்த மனிதர்களும் முடங்கிக் கிடந்த பிராணிகளும் வண்ணமயமான இன்ப உலகத்தைக் காண வெளியேவருவார்கள். நம்பிக்கையும் அன்பும் தழைக்கின்றன. ஹோலி காலநிலை மாற்றத்தைக் குறிக்கின்றது. கோடைக்காலம் துவங்குகிறது. ஏழைகள் சரியான ஆடையில்லாமல், குளிரில் தங்குவதற்குச் சரியான இடமில்லாமல் தவித்த குளிர்காலம் முடிந்துவிட்டது. புதுவாழ்வு பிறக்கும் இந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுவது பொருத்தம்தானே!

உழவர்களுக்கு ஹோலிப் பண்டிகை என்பது அறுவடையைக் கொண்டாடும் பண்டிகை. வடநாட்டில் 'ராபி' என அழைக்கப்படும். ஆங்கில நாள்காட்டியின்படி இது மார்ச் மாதம் கொண்டாடப்படுகிறது.

ஹோலிப் பண்டிகைக்கான ஆயத்தங்கள் சில நாட்களுக்கு முன்பே தொடங்கி விடுகின்றன. வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டு, வாசலில் அழகிய ரங்கோலி கோலங்கள் போடப்படுகின்றன. முன்பு, சில சிவப்பு நிறப்பூக்களிலிருந்து சாயம் தயாரித்தனர். இப்பொழுது வண்ணப்பொடிகளும் பீச்சாங்குழல்களும் எங்கும் கிடைக்கின்றன. இன்றும் சில கிராமங்களில் அரிசி மாவில் மஞ்சள் பொடி கலந்து உபயோகிக்கின்றனர். குழந்தைகள் மூங்கிலால் குழல்கள் செய்கின்றனர். சில பிரதேசங்களில் விசேஷ நடனங்கள் ஆடுவதுண்டு,

புதுரொட்டியைச் சர்க்கரைப் பாகில் ஊறவைத்துச் செய்யப்படும் 'மல்புவா' என்ற தின்பண்டத்தை அனைவரும் விரும்புவர். உத்திரப்பிரதேசத்தில் குஜியா, பாப்ரி போன்ற பண்டங்கள் மக்காச்சோள மாவினால் தயாரிக்கப்படுகின்றன. மகாராஷ்ட்ரத்தில் 'பூரண்போலியும்', குஜராத்தில் 'தானி' எனப்படும் ஒருவகை ரொட்டியும் பிரபலமானவை. நகரத்திலுள்ளவர்கள் இன்று பலவகை இனிப்புகளைக் கடைகளில் வாங்குகின்றனர். ஆனால், கிராமங்களில் இன்றும் ஹோலிக்குரிய தின்பண்டங்களை அவரவர் வீட்டிலேயே செய்கின்றனர்.

ஹோலிப் பண்டிகையின் மூலம் மக்கள் பலவிதமான பாரம்பரியத் தடைகளைத் தகர்த்துவிட்டு, வெளியே வருகின்றனர். கடமைகள், பொறுப்புகள் போன்றவற்றில் முழு சுதந்திரத்துடன் ஆடலும் பாடலுமாக மூழ்கிக் கிடக்காமல் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.

இந்தி மூலம் : எம். ஆர்.கபூர்

ஆங்கிலத்திலிருந்து தமிழில்: அகிலா சிவராமன்

## செயல்பாடுகள்

- அறுவடைத் திருநாளாகக் கொண்டாடப்படும் விழா ....................
- ஹோலிப் பண்டிகை கொண்டாடப்படும் மாதம் ........................
- நமது பகுதிகளில் கொண்டாடப்படும் பண்டிகைகளையும் அவை கொண்டாடப்படும் மாதங்களையும் கண்டறிந்து பட்டியலிடுங்கள்.

**உதா.**

| **பண்டிகைகள்** | **மாதம்** |
|---|---|
| • ஓணம் | சிங்ஙம் / ஆவணி மாதம் |
| • தீபாவளி | |
| • கிறிஸ்துமஸ் | |
| • விஷுக்கணி | |
| • ரம்சான் | |

- குறிப்பு எழுதுங்கள்.
  - மல்புவா
  - குஜியா
  - பூரண்போலி
  - தானி

## கோலங்கள்

'கோலமாவு...! கோலமாவு...!' என்று கூவிக்கொண்டே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார், கோலமாவு விற்பனை செய்பவர்.

அந்தக் குரலைக் கேட்டு வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வந்த கமலா, "கோலமாவு...! இங்கே வாங்க" என்று கூப்பிட்டாள்.

கோலமாவுக்காரர் வந்ததும், "ஒருபடி கொடுங்க" என்று வாங்கிக்கொண்டு காசைக் கொடுத்த கமலா, "மாலா அக்கா!...மாலா அக்கா!..." என்று குரல் கொடுத்தாள்.

மாலாவின் வீடு, பக்கத்து வீடுதான்.

"என்ன கமலா... ஏன் கூப்பிடுறே?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள், மாலா.

"மாவுக்காரரே!... அக்காளுக்கும் ஒரு படி மாவு கொடுங்க" என்றாள் கமலா.

மாவுக்காரர் படியை எடுத்து அளந்திடப் போனார்.

"வேண்டாம்... வேண்டாம்... நீங்க போங்க ஐயா" என்றாள் மாலா.

"ஏன் வேண்டாங்கிறீங்க?... நல்ல மாவும்மா... அள்ளிப் பாருங்க", என்றார் கோல மாவுக்காரர்.

"ஐயா! எனக்கு வேண்டாம். நீங்க போங்க" என்றாள் மாலா.

கோலமாவுக்காரர் போய்விட்டார்.

"அக்கா! ஏன் மாவு வேண்டாமுன்னு சொன்னீங்க?... நாளைக்கு மார்கழி மாதம் பிறக்குது. வாசலில் கோலம் போடணும்லே..." என்றாள்.



"போடணும்தான். ஆனால் இந்த மாவுலே இல்லே."

"இந்த மாவை வாங்கித்தானே எல்லாரும் போடுறாங்க."

"எல்லாரும்னு சொல்லாதே. நம்மைப் போல கிராமத்திலே உள்ளவங்களிலே சில பேருதான் இந்த மாவை வாங்கிப் போடுவாங்க."

"அப்போ....நாளைக்கு....?"

"என் வீட்டு வாசலுக்கு விருந்தாளிங்க வருவாங்க. வந்து பார்" என்றாள் மாலா.

மறுநாள்–

மார்கழி பிறந்தது. கோவில்களில் ஒலிபரப்பான பக்திப் பாடல்கள் காதைத் துளைத்துக் கொண்டிருந்தன.

வீட்டுக் கொல்லைகளிலெல்லாம் பரங்கிப் பூக்கள் மலர்ந்து அழகூட்டிக் கொண்டிருந்தன.

கமலா, தன் வீட்டு வாசலில் பெரிய கோலமாகப் போட்டுக் கொண்டிருந்தாள். மாலாவோ, தன் வீட்டு வாசலில் அளவாக, கமலா போடுவதைவிடவும் சற்றுச் சிறிதாகப் போட்டுக் கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில், இருவர் வீட்டு வாசல்களிலும் கோலங்கள் அழகூட்டின.

'அக்கா! இங்கே வந்து பாரு. பெரி... ய்...ய.... கோலம்' என்றாள். கமலா.

"சற்றுப்பொறு, இங்கே விருந்தாளிங்க வந்துகிட்டு இருக்காங்க பார்த்துட்டு வர்றேன்" என்றாள், மாலா.

"விருந்தாளியா?.. எங்கே?.. ஒருத்தரையும் காணோமே." "இங்கே வா! என் கோலத்தைப் பார்" என்றாள் கமலா.

மாலா போய்ப் பார்த்தாள். வாசலை அடைத்துப் பெரிய கோலமாகப் போட்டிருந்தாள் கமலா.

"அழகாக இருக்கிறது" என்று பாராட்டினாள் மாலா.

"உன் வீட்டு வாசலுக்கு விருந்தாளிங்க வருவாங்கன்னு சொன்னியே... ஒருவரையும் காணோமே..." என்றாள் கமலா.

"இந்நேரம் வந்திருப்பாங்க. வா போய்ப் பார்க்கலாம்" என்று கமலாவை அழைத்துக்கொண்டு தன் வீட்டு வாசலுக்கு வந்த மாலா, "விருந்தாளிங்க வந்துட்டாங்க" என்றாள்.

சுற்றிலும் பார்த்துவிட்டு, "என்னக்கா சொல்றே?... இங்கே ஒருத்தரையும் காணோமே" என்றாள் கமலா.

"நல்லா பாரு... குனிந்துபாரு..." என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் மாலா.

கமலா, கூர்ந்து பார்த்தாள்.

சிற்றெறும்புகள் வரிசையாக வந்து கோலத்தில் இருந்த மாவைத் தின்றுவிட்டுப் போய்க் கொண்டிருந்தன. மேலும் பல எறும்புகள் கோலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன.

"அப்போ....இந்தச் சிற்றெறும்புகள்...?" "ஆமா. அவைதான் நான் கூறிய விருந்தாளிகள். அவையும் சுவையான விருந்துக்காக இந்த மார்கழி மாதத்தை எதிர்ப்பாரத்துக் கொண்டிருக்கும். மார்கழி மாதம் முழுவதும் அவைகளுக்கு விருந்துதான். வந்து சாப்பிட்டுவிட்டு, வாழ்த்திவிட்டுப் போகுங்க."

"என் வீட்டு வாசலுக்கு வரலையே, ஏன்?" நீ போட்ட கோலப்பொடி கல்லைப் பொடித்த மாவு. அதை எப்படி அவை தின்னும்?... நான் போட்டது, அரிசியைப் பொடித்த மாவு. அதாவது, பச்சரிசி மாவு, அதுதான் அவைகள் விரும்பி உண்ணக்கூடிய உணவு. நீ அந்தக் கல்மாவை வாங்குவதற்கு முன்பே நான் பச்சரிசியை அரைத்து, மாவு தயார் செய்துவிட்டேன். அதனால்தான் அந்த மாவை நான் வாங்கவில்லை" என்றாள் மாலா.

"அக்கா! இது தெரியாமல் இருந்துவிட்டேன். இப்போதே போய் நானும் பச்சரிசியை இடித்து, மாவு எடுத்து வைக்கிறேன். நாளைக்கு என்

வீட்டுக்கும் விருந்தாளிங்க வருவாங்களா?" என்று கேட்டாள் கமலா.

"நிச்சயமா, உடனே அதைச் செய்" என்று அவளை அனுப்பி வைத்தாள் மாலா.

மறுநாள் காலை,

கமலாவின் வீட்டு வாசலில் மாக்கோலம், அரிசி மாவில் போட்ட கோலம்.

அதை நுகர்ந்த சிற்றெறும்புகள் சாரை சாரையாக அங்கே சென்று அந்தக் கோலத்தில் இருந்த மாவைத் தின்று கொண்டிருந்தன.

கமலாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

"அக்கா!... எவ்ளோ... விருந்தாளிங்க! வந்து பாரேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் கமலா.

"ஊம். இன்று மட்டும் அல்ல. எப்போதுமே கோலம் போடும்போது அரிசி மாவினாலேயே போடு" என்றாள். மாலா.

"சரி அக்கா" என்றாள் கமலா. பூப்போல மலர்ந்த முகத்துடன்!

– புலேந்திரன்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்தீர்கள் அல்லவா? அதை உரையாடல் வடிவில் எழுதி வெளியிடுங்கள்.
- ஓணத்திற்கு அத்தப்பூக்களம் அமைத்திருப்பீர்கள். அதை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- வண்ணம் கொடுங்கள்.





- பச்சரிசி மாவில் கோலம் போடுவதற்கு மாலா சொன்ன காரணத்தைக் கூறுங்கள். எழுதுங்கள்.



## வேற்றுமை

அன்று அதிகாலயிலேயே அம்மா எழுந்தார். என்னையும் வேகமாக எழுந்து பல்லைத் துலக்கி குளித்து வரச் சொன்னார். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. காலை உணவாக எனக்குப் பிடித்த இட்லியும் சாம்பாரும் வைத்திருந்தார். அதனைச் சாப்பிட்டு முடித்தவுடன் இராமுவின் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி வரச் சொன்னார். உடனே நான் எனது சைக்கிளை எடுத்துக்கொண்டு செல்லும் நேரத்தில் கண்ணா...! என்று அழைத்து, நாம் மலைக்கோவிலுக்குச் செல்ல வேண்டும். நீ வரத் தாமதமானால் நான் மலைக்கோவிலின்கண் காத்திருப்பேன் என்று கூறினார்.

இச்செய்தியை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி மாணவர்களிடம் இதிலுள்ள ஒவ்வொரு தொடர்களுக்குமிடையே உள்ள பொருள் உங்களுக்குப் புரிந்ததா? எனக் கேட்கிறார். மாணவர்கள் புரிந்தது ஐயா என்கின்றனர். ஒரு தொடருக்கும் இன்னொரு தொடருக்கும் இடையே பொருளை வேறுபடுத்துவது எது? என வினவுகிறார். மாணவர்கள் குழப்பத்தோடு இருக்கின்றனர்.

உடனே ஆசிரியர்,

பல் துலக்கி,

பல்லைத் துலக்கி.

இதிலுள்ள 'பல்' என்பது ஒரு பெயர்ச்சொல். இரண்டாவது வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொல்லின் ( பல் ) பொருள் வேறுபாட்டை 'ஐ' என்னும் உருபு மாற்றமடையச் செய்கிறது. இதுதான் 'வேற்றுமை' என்பர். எனவே வேற்றுமை என்பது, பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ஆகும். வேற்றுமைகள் எட்டு வகைப்படும்.

அம்மா எழுந்தார் – எழுவாய் வேற்றுமை (உருபு இல்லை).

பல்லைத் துலக்கி – (ஐ) இரண்டாம் வேற்றுமை உருபு.

என்னால் எழுந்திருக்க – (ஆல்) மூன்றாம் வேற்றுமை உருபு.

எனக்குப் பிடித்த (கு) – நான்காம் வேற்றுமை உருபு.

இராமுவின் கடைக்கு (இன்) – ஐந்தாம் வேற்றுமை உருபு.

எனது சைக்கிள் (அது) – ஆறாம் வேற்றுமை உருபு.

மலைக்கோவிலின்கண் காத்திருப்பேன் – ஏழாம் வேற்றுமை உருபு

கண்ணா! – எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) உருபு இல்லை.

மேற்கூறியவைதான் வேற்றுமையும் அதன் உருபுகளும் ஆகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. இப்பொழுது புரிந்ததா?

## அலகு 6

# யாதும் ஊரே! யாவரும் கேளிர்



குடிமை உணர்வு இல்லாவிட்டால் மனிதர்கள் தன்னலவாதிகளாக மாறிவிடுவர். குடிமை உணர்வுடையோர் ஒற்றுமையுடன் நாட்டிற்காகவும் நாட்டு நலத்திட்டத்திற்காகவும் உழைப்பர். அவ்வகையில் தேசிய நலன் காணும் பல்வேறு இயக்கங்கள், நாட்டு நலப்பணித்திட்டங்கள், தமிழுக்காக உழைத்த சான்றோர்கள் இந்திய விடுதலைக்காகப் போராடிய தலைவர்கள், தேசியக் கொடியின் சிறப்பு ஆகியவற்றை மாணவர்கள் அறியும் வகையில் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் நலனுக்காக



### கூட்டுறவே நாட்டுயர்வு

கூட்டுற வில்லா ஒருநாடு
குறைவற வாழ்வது வெகுபாடு;
மேட்டிமை பேசும் நாடெல்லாம்
மேன்மை பெற்றது கூட்டுறவால்.

கல்வி சிறந்திடும் கூட்டுறவால்
கலைகள் நிறைந்திடும் கூட்டுறவால்
செல்வம் வலுத்திடும் கூட்டுறவால்
சேமம் நிலைத்திடும் கூட்டுறவால்.

சோம்பலை ஒழித்திடும் கூட்டுறவு
சுறுசுறுப் பளித்திடும் கூட்டுறவு
தேம்பிடும் கைத்தறி நெசவாளர்
திடமுறச் செய்திடும் கூட்டுறவு.

வாணிபம் பெருகிடும் கூட்டுறவால்
வளப்பம் மிகுந்திடும் விவசாயம்
நாணய நடத்தைகள் அதிகரிக்கும்
நம்பிக்கை வளர்ந்திடும் கூட்டுறவால்.

பண்டக சாலைகள் நிறைவாகும்;
பணமுடை என்பது குறைவாகும்;
கொண்டுள காரியம் எதுவெனினும்
கூட்டுற விருந்தால் அதுமுடியும்.

அன்பு புலப்படும் கூட்டுறவால்
ஆட்சி பலப்படும் கூட்டுறவால்
தென்பு மிகுந்திடும் யாருக்கும்
தேசம் உயர்ந்திடும் பாருக்குள்.

கூட்டுற வென்னும் கொள்கையினைக்
குற்றமில் லாமல் மேற்கொண்டால்
நாட்டில் தரித்திரம் நீங்கிவிடும்
நம்முடை சுதந்தரம் ஓங்கிவிடும்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கடராம ராமலிங்கம் |
| பிறப்பு | : | 1888 அக்டோபர் 19 |
| ஊர் | : | நாமக்கல் மாவட்டம், மோகனூர் |
| தந்தை | : | வெங்கடராமன் பிள்ளை |
| தாய் | : | அம்மணியம்மாள் |
| அறியப்படுவது | : | நாமக்கல் கவிஞர் |
| படைப்புகள் | : | மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், மரகதவல்லி, தமிழ்த்தேன்.... |
| விருது | : | பத்மபூஷன் |
| இறப்பு | : | 1972 ஆகஸ்ட் 24 |

## செயல்பாடுகள்

◈ வாசிப்போம் கண்டுபிடிப்போம்.

பாடலை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

- கூட்டுறவால் அதிகரிப்பது ...................
- கூட்டுறவால் சிறப்பது ....................
- கூட்டுறவால் பலப்படுவது ....................
- கூட்டுறவால் நிறைவாவது ......................
- கூட்டுறவால் வளப்பம் மிகுந்திடுவது .....................

◈ ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடிக்கலாம்.

◈ முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- கல்வி – கலைகள்
- 
- 

- இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
    - கூட்டுறவு – மேட்டிமை
    -
    -

◈ மெட்டமைத்துப் பாடுங்கள்.

கூட்டுறவே நாட்டுயர்வு பாடலுக்கு வெவ்வேறு மெட்டுகள் அமைத்துப் பாடிப்பாருங்கள். இனிய மெட்டைத் தேர்வு செய்யுங்கள்.

◈ கவர்ந்த வரிகள்.

பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? அவ்வரிகள் பிடிக்கக் காரணம் என்ன என்று எழுதுங்கள்?

◈ மாற்றி எழுதுவோம்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற பாடலை எளிய உரைநடை வடிவில் மாற்றி எழுதுங்கள்.

## நாட்டு நலப்பணித் திட்டம் (NSS).

மாணவர்களை நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்களாக மாற்ற வேண்டியது இன்றைய இன்றியமையாத தேவை ஆகும். அதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) ஆகும். அந்த இயக்கத்தை அறிந்து கொள்ளுவது மாணவர் கடமை ஆகும்.



இவ்வியக்கம் 1969–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முப்பத்தேழு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நாற்பதாயிரம் மாணவர்கள் இதில் பங்கு கொண்டார்கள். இத்திட்டத்தால் நல்ல பயன் விளையவே, இது மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1980–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுச் செவ்வனே இயங்கி வருகிறது.

கற்கும் காலத்திலேயே தொண்டுள்ளத்தைத் தோற்றுவிப்பதே இதன் தலையாய நோக்கம் ஆகும். நாட்டு நலனில் ஆர்வம் கொண்டு, ஒவ்வொரு மாணவனும் தம்மால் இயன்ற நன்மைகளைச் செய்ய முன்வர வேண்டும். இதனால் மக்களோடு கலந்து பழகும் வாய்ப்பு ஏற்படும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த மனப்பான்மை ஏற்படும். துன்புற்றோர் துயர் துடைக்கும் அருந்தொண்டால், செயற்கரிய செயல்கள் செய்து, நல்ல குடிமகனாகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவே இவ்வாய்ப்பு நல்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் திட்ட அலுவலராக இருந்து மாணவர்களுக்கு வழிகாட்டுவார். இதற்கென அவருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். வாய்ப்பு நேரும் போதெல்லாம் பள்ளிகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்துதல்; சாலைகளைச் சீர்ப்படுத்துதல்; குளம், குட்டைகள் மாசுபடாது இருக்க மருந்து தெளித்தல்; விழாக் காலங்களில் மக்களை நெறிப்படுத்துதல்; அவர்களுக்கு வழிகாட்டுதல் போன்ற பணிகளைச் செய்வதற்கு இவர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

சீரழியும் சிற்றூர் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அங்கு சிலநாள் முகாமிட்டுத் தங்கியிருந்து, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திச் செய்வது இத்திட்டத்தின் சிறப்பம்சம் ஆகும். அப்போது மக்களுக்குக் கல்வியின் அவசியத்தையும் சுகாதாரமாக இருக்க வேண்டியதன் தேவையையும் அதற்காக அரசு மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதன் இன்றியமையாமையையும் சொற்பொழிவு, நாடகம், இசை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் போன்றவற்றால் உணர்த்துவார்கள்.

கல்வி கற்று, அறியாமை நீங்கி, மக்கள் நோயற்ற வாழ்வில் வாழ வழி காட்டும் இவ்வியக்கம் எல்லாப் பள்ளிகளிலும் இயங்க வேண்டும். நமது அரசு தரும் ஆதரவோடு பொது மக்களும் நன்கொடை நல்கி இத்திட்டம் வளரப் பாடுபடவேண்டும்.

– புலவர் தெ. தமிழ்க்குமரனார்

## செயல்பாடுகள்

- வாசிப்போம், கண்டுபிடிப்போம்.

நாட்டு நலப்பணித் திட்டத்தைப் பற்றிய செய்திகளை வாசித்தீர்கள் அல்லவா? கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைக் கண்டுபிடியுங்கள்.

- நாட்டு நலப்பணித் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ..............
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடலின் பொருளை எழுதுங்கள்.
- நாட்டு நலப்பணித் திட்டத்தின் தலையாய நோக்கத்தை எழுதுங்கள்.

- தேடலாம்... சேகரிக்கலாம் சொற்சூரியனைப் பூர்த்திச் செய்யலாம்.

நாட்டு நலப்பணித் திட்டத்தைப் போல அரசு நிதி உதவியுடன் பல்வேறு திட்டங்கள் நமது பள்ளிகளில் இயங்கி வருகின்றன. அவற்றின் பெயர்களைச் சொற்சூரியனில் பூர்த்திச் செய்யவும்.




- சுவரொட்டி தயாரித்தல்.

இளம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஓர் அலகு உங்கள் பள்ளியில் புதிதாகத் தொடங்கப்படுகிறது. சங்கத்தின் துவக்க விழாவிற்குப் பொதுமக்கள் அனைவரையும் அழைக்க சுவரொட்டி உருவாக்குங்கள்.

- சிறுகுறிப்பு தயார் செய்தல்.

மாணவர் காவலர் திட்டம் (எஸ்.பி.சி.) என்பது உயர்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் ஒரு திட்டமாகும். அத்திட்டம் பற்றிய தகவல்களைச் சேகரித்து வகுப்பில் வெளியிடுவதற்கு ஏற்றவகையில் குறிப்புகள் தயார் செய்யவும்.

- பத்திரிகைச் செய்தி தயாரித்தல்.

உங்கள் பள்ளியில் நடைபெற்ற இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் துவக்கவிழாவைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கான பத்திரிகை செய்தி தயாரிக்கவும்.

## பாராட்டுக் கடிதம்

அரசு உயர்நிலைப் பள்ளி,
கரிக்கம் – அஞ்சல்,
கொல்லம் மாவட்டம்.
03.06.2014.

இதய நண்பா!

வணக்கங்கள், வாழ்த்துகள்! நலம் நலம் வளர்க! உன் பள்ளியில் நடந்த விளையாட்டு விழாப் போட்டியில் பங்கெடுத்துப் பரிசு பெற்றமையைப் பாராட்டி இம்மடல் விடுக்கிறேன். 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்' என்னும் திருமூலர் வாக்கினைப் பின்பற்றி, உடல் வளர்க்கும் போட்டிகளில் பங்கெடுத்த உன்னைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. மேலும் நடந்து முடிந்த தேர்வுகளில் எல்லாப் பாடங்களிலும் பள்ளியிலேயே முதல் மாணவனாகவும் வந்திருக்கிறாய்.

படிப்பில் கவனமுள்ளவர்கள் விளையாட்டில் பூஜ்ஜியம் (0) என்னும் நிலையை மாற்றியிருக்கிறாய். விளையாட்டு வீரனுக்குப் படிப்பு வாராதென்னும் வரலாற்றை மாற்றியிருக்கிறாய். விளையாட்டுப் போட்டிகள் அனைத்தையும் வென்றிருக்கிறாய். அதற்காகத் தங்கக் கோப்பையைப் பெற்றிருக்கிறாய். படிப்பில் வென்று அதற்கான சான்றிதழையும் பெற்றிருக்கிறாய். என்னே உனது அறிவு! என்னே உனது ஆற்றல்! அதற்காக உன்னைப் பலமுறைப் பாராட்டுகிறேன். நீ நேரில் இருந்தால் பெரிய 'கேக்'கை வாயிலே திணித்து, உன்னைத் தூக்கித் திக்குமுக்காட வைத்திருப்பேன். என்ன செய்வது? விடுமுறையில் சந்திக்காமலா இருக்கப் போகிறோம்? அப்போது கவனித்துக் கொள்கிறேன்.

படிப்பு, விளையாட்டு இவற்றின் திறன் சிறிது இருந்தாலும், சிலர் விடுப்பு எடுத்து விடுகிறார்கள். நீ நிச்சயம் அப்படிப்பட்டவனல்ல உங்கள் பள்ளியில் ஒழுக்கத்திற்காக வழங்கப்படும் பரிசும் இந்த ஆண்டு உனக்கே கிடைக்கும் என நம்புகிறேன். அதற்கான முதல் வாழ்த்தையும் இப்போதே கூறிக் கொள்கிறேன். வாழிய! வணக்கம்!

உன் அன்பு நண்பன்,
**முத்தமிழ்ச் செல்வன்**

பெறுநர்
ம. சரவணன்,
அரசு மேனிலைப்பள்ளி,
சந்தனக்காவு.

## செயல்பாடுகள்

- வாசிப்போம் கண்டுபிடிப்போம்.
  - 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேன்' – என்று பாடியவர் யார்?
  - பள்ளியில் நடந்த எந்தப் போட்டியில் சரவணன் பங்கு பெற்றான்?
  - விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சரவணனுக்கு எந்தக் கோப்பைப் பரிசாக வழங்கப்பட்டது?

- வாழ்த்து அட்டை தயாரித்தல்.

  நாட்டு நலப்பணித் திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு மாநில அளவில் சிறந்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புகழேந்திக்கு வாழ்த்து அட்டை தயாரிக்கவும்.

- நம்மைப் பாராட்டுபவருக்கு நன்றி தெரிவிப்பது உயர்ந்த பண்பாகும். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற உன்னைப் பாராட்டிக் கடிதம் எழுதிய உனது நண்பனுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதவும்.





## தமிழ்த்தாத்தா உ.வே.சா

செந்தமிழ் மொழியின் இன்பத்
    தீஞ்சுவைத் தேனை யுண்டு
பந்தமும் பாசமும் பற்றும்
    பைந்தமிழ் மீதே வைத்து
வெந்திடும் வெயிலில் காய்ந்தும்
    மழையினில் நனைந்தும் சென்றே
தந்திடச் செய்து, ஏட்டின்
    தகுதியை ஆய்வும் செய்தார்!

அமுதினை மறந்து, நாளும்
    அலைந்திடும் அபலை போலே
தமிழகம் முழுதும் சென்று
    தணலிலும் நீரிலும் போடும்
தமிழமு தான ஏட்டைத்
    தரும்படி கெஞ்சிக் கேட்டே
தமிழரின் பெருமை தன்னை
    தரணியில் பரவச் செய்தார்!

சாமிநா தய்யர் மட்டும்
    தனக்கென என்றி ருந்தால்
நாமினி தென்று போற்றும்
    சிலப்பதி காரம், மேகலை,

**ஐம்பெருங்காப்பியங்கள்**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

சீவக சிந்தா மணியும்
சங்க இலக்கியம் எல்லாம்
தாவியே தணலில் புனலில்
சாவினைத் தழுவி யிருக்கும்!

தமிழரின் தாத்தா வாக
சாமிநா தய்யர் வந்தார்!
தமிழரின் சொத்தைக் காத்தார்!
இலக்கியம் விளங்கச் செய்தார்!
தமிழரின் தாத்தா உ.வே.சா.
தமிழ்த்தாய் பெற்ற தங்கம்!
அமிழ்தென தமிழைப் பேணி
அழகுறச் செய்தார் வாழி!

– கவிஞர் சாப்டூர் சதுரகிரியான்

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சு.சு. நதர ராசன் |
| புனைபெயர் | : | கவிஞர் சாப்டூர் சதுரகிரியான் |
| பிறப்பு | : | 1944 ஏப்ரல் 22 |
| ஊர் | : | சாப்டூர் , மதுரை மாவட்டம் |
| தந்தை | : | சுப்பையா பிள்ளை |
| தாய் | : | கோமதியம்மாள் |
| நூல்கள் | : | பூ மழை, சிறுவர் கவிதைப் பூங்கா, ஆசை ஆசையாய், சுட்டிப்பயம் |
| விருதுகள் | : | நூலகப் புரவலர், தமிழ்ப் பணிச்செம்மல், கவிபாரதி, கவிச்சுடர், மதுரைத் தென்றல் |

## செயல்பாடுகள்

◈ பொருள் அறிவோம்.

அமுதம், அபலை, தணல், தரணி போன்ற சொற்களுக்கு அகரமுதலியைப் பார்த்து பொருளைக் கண்டுபிடிக்கவும்.

◈ குறிப்பு எழுதுங்கள்.

- தமிழ்த்தாத்தா உ.வே.சா.

◈ வாசிப்போம், கண்டுபிடிப்போம்.

- கவிதையை வாசித்து முதலெழுத்து ஒன்றி வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கவிதையை வாசித்து இரண்டாம் எழுத்து ஒன்றி வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- பாடலைப் புதிய மெட்டமைத்து இசையோடு பாடுங்கள்.

- வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | உ. வே. சாமிநாத ஐயர் |
| பிறப்பு | : | 1855 பிப்ரவரி 19 |
| தந்தை | : | வேங்கட சுப்பையா |
| தாய் | : | சரசுவதி அம்மாள் |
| பிறந்த இடம் | : | உத்தமதானபுரம். திருவாரூர் மாவட்டம் , தமிழ்நாடு |
| சிறப்புப் பெயர் | : | தமிழ்த் தாத்தா |
| பதிப்பித்த நூற்கள் | : | சீவக சிந்தாமணி, மணிமேகலை, குறுந்தொகை, இரட்டை மணிமாலை, பத்துப்பாட்டு போன்ற 90–க்கும் மேற்பட்ட நூற்கள். |
| இறப்பு | : | 1942 ஏப்ரல் 28 |

- உ. வே. சாமிநாதய்யரின் சிறப்புப் பெயர் தமிழ்த்தாத்தா என்று படித்தோம். அதைப் போன்று தமிழறிஞர்களின் சிறப்புப் பெயர்களைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| உ. வே. சாமிநாதய்யர் | தமிழ்த்தாத்தா |
| பாரதிதாசன் | பாவேந்தர் |

- தமிழுக்குத் தொண்டாற்றிய சிறப்பு மிக்க தமிழறிஞர்களின் தகவல்களைச் சேகரித்துத் தமிழ் வரலாற்று நாயகர்கள் என்ற தலைப்பில் தொகுப்பு உருவாக்குங்கள்.

## கப்பலோட்டிய தமிழன்

இந்திய நாடு விடுதலை பெறத் தம் நலம் பாராது நாட்டிற்குத் தம்மையே அர்ப்பணித்த தமிழக விடுதலைப் போராட்டத் தலைவர்களுள், ஒருவர் வ.உ.சி. என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட வ.உ.சிதம்பரனார். ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்தின் ஆணிவேரான 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு எதிராகச் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' தொடங்கி 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பட்டப் பெயர் பெற்றார்.

வ.உ.சிதம்பரனார் தமிழகத்தின் தென்மாவட்டங்களுள் ஒன்றான திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் உலகநாதப் பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் மகனாக 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5–ஆம் தேதி பிறந்தார்.

வ.உ.சிதம்பரனார் முதலில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தார். ஆங்கிலம் கற்க வசதியில்லை. இவருடைய தந்தை இதற்கென பள்ளிக்கூடம் கட்டுவித்து, அப்பள்ளிக்கான ஆசிரியரையும் நியமித்தார். பின்னர், தமது உயர்நிலைப் பள்ளிப் படிப்பைத் தூத்துக்குடியில் உள்ள செயின்ட் பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப்பள்ளியிலும் தொடர்ந்து கல்லூரிப் படிப்பையும் முடித்து 1895–ஆம் ஆண்டு சட்டத் தேர்வில் தேர்வு பெற்று



வழக்கறிஞர் ஆனார். வழக்கறிஞர் தொழிலில் இவரது வாதாடும் திறமை இவருக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தது. இவர் தமது 23–ஆவது வயதில் வள்ளியம்மை என்ற பெண்ணை மணந்து கொண்டு சிலகாலம் வாழ்க்கை நடத்தினார். எதிர்பாராத விதமாக வள்ளியம்மை இறந்து போகவே, மீனாட்சி என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டார். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைக்கும், இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

இவர் வழக்கறிஞராக மட்டுமல்லாமல் தேசபக்தியுடையவராகவும் விளங்கினார். நம்நாடு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். நம்மிடம் இருந்து அரசைப் பறித்ததோடு நில்லாமல் வாணிபத்தையும் பெருக்கிக் கொண்ட வெள்ளையரை விரட்டி அடிக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் வங்காளத்தில் பிரிவினையை ஏற்படுத்தினார் லார்டு கர்சான். இதன் மூலம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்க நினைத்தார். இதனை எதிர்த்து நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பு இவரைச் சுதந்திரப் போரில் தீவிரமாக ஈடுபடச் செய்தது. இவர் தம் வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டார். நாட்டு விடுதலைப் போரில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்திய சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றினை 1906–ஆம் ஆண்டு நிறுவி ஆங்கிலேயருக்குப் போட்டியாகக் கப்பல் ஓட்டினார். ஆரம்பத்தில் சொந்தமாகக் கப்பல் வாங்காமல் 'ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியிடமிருந்து கப்பல்களைக் குத்தகைக்குப் பெற்று ஓட்டினார். தமக்குப் போட்டியாகக் கப்பல்கள் ஓடுவதைப் ஆங்கிலேயர் விரும்ப வில்லை. இந்தியக் கப்பல் கம்பெனியைக் கலைக்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆங்கிலேயக் கம்பெனியாரின் மிரட்டலுக்குப் பயந்து குத்தகைக்குத் தந்திருந்த கப்பல்களை அதன் உரிமையாளரான 'எஸ்ஸாஜி பாஜ்பாய்' திரும்பப் பெற்றுக் கொண்டார். சுதேசிக் கம்பெனியை நம்பி வெள்ளையரைப் பகைத்துக் கொண்ட தமிழ் வணிகர்கள் திகைத்தனர். சிதம்பரனார் இவ்வளவு துன்பத்திலும் மனம் கலங்கவில்லை. உடன் இலங்கைக்குச் சென்று பெரிய கப்பல் ஒன்றினைக் குத்தகைக்குப் பேசித் தூத்துக்குடி துறைமுகத்துக்குக் கொண்டு வந்தார். பின்னர் சொந்தமாகக் கப்பல்களையும் இயந்திரப் படகுகளையும் வாங்கி தொடர்ந்து நிர்வகித்து வந்தார்.

வெள்ளையர்கள் கப்பல் கம்பெனி பிரயாணிகளைத் தம் பக்கம் திருப்பிக் கொள்ள பல வழிகளில் முயற்சி செய்தும் பலனளிக்காமல் போகவே. கடைசியில் சிதம்பரனாருக்குப் பல இலட்சம் ரூபாய் இனாமாகக் கொடுப்பதாகவும் இந்திய சுதேசிக்கப்பல் கம்பெனியை நல்ல விலை கொடுத்துத் தாங்களே வாங்கிக் கொள்வதாகவும் கூறினார்கள். இதனை ஏற்க சிதம்பரனார் மறுத்து விட்டார். இதனால் இவர் மீது வெள்ளையருக்கு

இருந்துவந்த கோபம் மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

இச்சமயத்தில் சிதம்பரனார் காங்கிரஸில் பாலகங்காதரத் திலகரைத் தலைவராகக் கொண்ட தீவிரக் கட்சியில் சேர்ந்து அரசியலில் முழுமையாக ஈடுபட்டார். இந்திய சுதேசிக்கப்பல் கம்பெனி இந்தியாவிற்குப் பொருளாதார நிலையில் சுதந்திரம் வாங்கிக் கொடுத்து விடுமோ என்று வெள்ளையர்கள் பயந்தனர். இதனால் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயர் அதிகாரிகள் சிதம்பரனாரைச் சிறையில் அடைத்து அவரது கப்பல் கம்பெனியை அடக்க முயற்சித்தனர்.

இருப்பினும் இவர் மனம் தளராமல் திலகரின் முற்போக்குக் கருத்துகளைத் தென்னகத் தமிழகம் முழுவதும் பரப்பினார். மேலும் ஊர் ஊராகச் சென்று, மேடை ஏறி, ஆங்கிலேயரின் ஆட்சி வெறியையும் அநீதியையும் எடுத்துக் காட்டினார். எவ்விதத்திலேனும் இவரைத் தடுக்க வேண்டும் எனக்கருதித் திருநெல்வேலியின் அப்போதைய கலெக்டராகத் திகழ்ந்த விஞ்ச் என்பவர் பொதுக் கூட்டங்களுக்குத் தடைவிதித்தார். இவர் தடையை மீறி திருநெல்வேலியிலேயே சொற்பொழிவாற்றினார். இதையறிந்த கலெக்டர் அன்றைய இவரது பேச்சு ராஜத்துரோகமானது என்று குற்றம் சாட்டினார். இவரை மாவட்டத்தைவிட்டு வெளியேறும்படியும் அரசியலில் தலையிடக் கூடாதென்றும் நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தார். சிதம்பரனார் அதற்கு உடன்பட மறுத்தார். அதனால் அரசாங்கத்தார் இவரைக் கைது செய்து 'ராஜத்துரோகி' என்று குற்றம் சாட்டி, விசாரணைக்கு நீதிமன்றம் கொண்டு சென்றனர். இறுதியில் நீதி மன்றம் நாற்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. இது பொது மக்கள் உள்ளத்தில் ஆங்கிலேய ஆட்சியின் மீது தீராத வெறுப்பினை உண்டாக்கியது. இதனைக் கண்டித்துப் பல்வேறு செய்தித்தாள்களும் எதிர்ப்புகளைத் தெரிவித்தன. அதன் பிறகு உயர்நீதி மன்றத்தில் இவரின் சிறைவாசம் பத்து ஆண்டுகள் குறைந்தன. இவரது நண்பர்களின் பெருமுயற்சியால் இலண்டனில் உள்ள பிரீகவுன்சிலில் அப்பீல் செய்ததில் தண்டனை ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.



சிதம்பரனார் கோயம்புத்தூர், கண்ணனூர் ஆகிய சிறைகளில் தமது தண்டனைக் காலத்தைக் கழித்தார். சிறைச்சாலையில் இவரைக் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களைவிட கேவலமாக நடத்தினர். சத்துக் குறைந்த உணவின் காரணமாக அவரது உடல் மெலிந்து விட்டது. சிறை டாக்டர்கள் எச்சரித்த பின்னர்தான் அவருக்குத் திரும்பவும் அரிசி உணவு கொடுக்கப்பட்டது. உடல் நலம் குன்றியிருந்த போதும் சிறையதிகாரிகள் கடுமையானச் செக்கு இழுத்தல், கல் உடைத்தல் போன்ற வேலைகளைக் கொடுத்துத் துன்புறுத்தினார்கள்.

இந்திய விடுதலை இயக்கத்தில் வ.உ.சி.யின் பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் இந்திய அரசு தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ.சிதம்பரனார் துறைமுகம் எனப் பெயரிட்டுள்ளது.

சிறையில் பட்ட துன்பங்கள் போதாதென்று வெளியிலிருந்தும் துன்பங்கள் தொடர்ந்தன. சிதம்பரனார் சிறை சென்றவுடன் ஆங்கிலேயக் கம்பெனிக்கு ஈடுகொடுக்க முடியாமல் இவரது கப்பல் கம்பெனி சீர்க்குலைந்தது. போட்டியைச் சமாளிக்க சுதேசிக் கம்பெனி நிர்வாகிகளால் இயலவில்லை. கம்பெனியைக் கலைத்துக் கப்பல்களை ஆங்கிலேயர்களிடமே விற்றுவிடும் சூழல் ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட சிதம்பரனார் மனம் வருந்தினார்.

இவர் ஆறு ஆண்டுகாலம் கடுங்காவல் தண்டனை அனுபவித்து முடிந்த பிறகு சிறையினின்று விடுதலையானார். இவரை வரவேற்று ஆறுதல் கூறிய ஒரே நண்பர் சுப்ரமணிய சிவா ஆவார். குடும்பத்தின் வறுமை காரணமாக மீண்டும் தூத்துக்குடியில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ள முடிவெடுத்தார். நீதிபதி வாலஸ் என்பவர் முயற்சியால்தான் திரும்பவும் இவர் இத்தொழிலை மேற்கொள்ள முடிந்தது. இந்த உதவிக்கு நன்றி செலுத்தும் வகையில் தமது புதல்வன் ஒருவனுக்கு வாலீஸ்வரன் என்று பெயரிட்டார். அதுபோல சிதம்பரனாருக்கு அவ்வப்போது பொருளுதவி செய்த தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தன் மற்றொரு மகனுக்குச் சூட்டினார்.

இந்திய விடுதலைக்காகத் தன் உடல், பொருள் அனைத்தையும் துறந்து போராடிய மாபெரும் தலைவர் சிதம்பரனார் சுதந்திரத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் நோய் வாய்ப்பட்டு 1936–ஆம் ஆண்டு நவம்பர் 18–ஆம் தேதி நள்ளிரவு இயற்கை எய்தினார்.

சிதம்பரனார் ஆரம்பித்த விடுதலைப்போர் வெற்றி பெற்றது. அவர் விரும்பிய சுதந்திர இந்தியாவைக் காண அவர் உயிருடன் இல்லை என்றாலும் அவரது புகழும் தியாக உணர்வும் நாட்டுப்பற்றும் இன்றளவும் பேசப்பட்டு வருவது பெருமை மிக்கச் செயலாகும்.

– தமிழரசன்

## செயல்பாடுகள்

- வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
  - செக்கிழுத்த செம்மல் என்று அழைக்கப்பட்டவர் ......................
  - வ.உ.சி. நிறுவிய கப்பல் கம்பெனியின் பெயர் ......................
  - சிறைவாசம் சென்று வந்த பிறகு வ.உ.சி. செய்த தொழில் ....................
  - வ.உ.சி. மீது வெள்ளையர் சாட்டிய குற்றம் ......................
  - வ.உ.சி. சிறையில் செய்த பணிகள் ......................
- விடை அளியுங்கள்.
  - வ.உ.சி. யை வெள்ளையர்கள் சிறையில் அடைத்தற்கான காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.

- சிறையில் அடைக்கப்பட்ட வ.உ.சி. எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டார் என்பதை வரிசைப்படுத்துங்கள்.

◈ நடித்துக் காட்டலாம்.

- பாடப்பகுதியை வாசித்து வ.உ.சி.யின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி ஒரு நாடகம் எழுதி வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.
- 'செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.' எனும் தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றுவதற்கான தகவல்களைத் திரட்டி வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.

◈ வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

- சுதந்திரம்
- பணிவுடன்
- கடமை
- சீர்க்குலைந்தது

## விடுதலை வீரர்கள்

### அம்புஜம்மாள்



பெண்கள் பள்ளியில் ஆசிரியையாக இருந்தவர். தொடக்ககாலத் தமிழ்ப் பெண் எழுத்தாளர்களில் ஒருவர். காந்தி நினைவு மாலை, காந்திக்கு எழுதிய கடிதங்கள் ஆகிய இவரது படைப்புகள் புகழ் பெற்றவை. சென்னையில் வசித்த இவர் 1930–இல் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். அந்நியத் துணிகளை எரித்தார். இதனால் ஆறு மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

### அஞ்சலையம்மாள்



கடலூரில் பிறந்தவர். கணவரையும் மகளையும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தவர். குடும்பத்துடன் சிறைக்குச் சென்றார். கர்ப்பிணியாகச் சிறை சென்ற அவர் பரோலில் வந்து குழந்தை பெற்றார். சட்டப்பேரவை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

### கே. பி. ஜானகியம்மாள்



மதுரையைச் சேர்ந்த இவர் சுதேசி இயக்கம் தொடர்பாக நாடகம் நடத்துவதற்காகத் தனது நகைகளை விற்று விஸ்வநாத தாசுக்குப் பணம் அளித்தார். சுதந்திரப் போராளிகள் ரகசிய மாநாடு நடத்துவதற்கு வீட்டை விற்றுச் செலவு செய்தார். மேடைகளில் பாடி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேடை நாடகக் கலைஞரான இவர் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் முதலாவது தலைவர் ஆவார்.

### பத்மாசினி அம்மையார்



லாலா லஜபதிராய் படுகொலையைக் கண்டித்து மதுரையில் பெண்கள் அணியைத் திரட்டிப் போராடினார். பெல்காமில் காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார். கர்ப்பிணிப் பெண்ணாக இருந்த நிலையிலும் 48 நாள்கள் நடந்தே சென்று தேசப்பற்றினை வெளிப்படுத்தியவர்.

### விஸ்வநாத தாஸ்



தனது நாடகங்களில் ஆங்கிலேயரைச் சாடிப் பேசுவார். பாஸ்கரதாசின் பாடல்களை நாடகத்தில் சேர்த்து விடுவார். நாடக மேடையிலிருந்து அடிக்கடி கைது செய்யப்பட்டவர். கொக்கு பறக்குதடி பாப்பா, கொக்கு அந்த வெள்ளைக் கொக்கு என்று பாடியவர். சிவகாசியில் பிறந்தவர். 20 முறை சிறைக்குச் சென்றவர்.

### சிங்காரவேலர்



வழக்கறிஞரான இவர் காந்தியின் ஒத்துழையாமை போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து வக்கீல்களுக்கும் அழைப்பு விடுத்தார். ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்து அந்நாளில் கருப்புக் கொடியேற்றிப் போராடினார். வேல்ஸ் இளவரசரின் இந்திய வருகையைக் கண்டித்துச் சென்னையில் போராட்டம் நடத்தினார். 1923–ஆம் ஆண்டு மே முதல் நாள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து இந்தியா விடுதலை அடைந்துவிட்டதைப் போன்று ஓர் உணர்வை ஏற்படுத்தி மே முதல் நாளை தொழிலாளர் தினமாகக் கொண்டாடினார்.

### கோவை என்.ஜி. ராமசாமி



பஞ்சாலைத் தொழிலாளரான இவர் இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரித்தானியரின் போர் முயற்சிகளுக்கு உதவக்கூடாது என்று சத்தியாகிரகம் நடந்தபோது, கோவை சிங்கநல்லூரில் சத்தியாக்கிரகம் செய்தார். இதனால் சிறைப்பட்டு வேலூர் கொண்டு செல்லப்பட்டார். 1941–இல் சிறைத் தண்டனை முடிந்து விடுதலையானார்.

### வேதரத்தினம் பிள்ளை



பிரித்தானிய அரசின் உத்தரவை மீறி, இராஜாஜி தலைமையில் நடைபெற்ற வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்குப் பெருமளவில் உதவியதால் சர்தார் வேதரத்தினம் பிள்ளை ஆறு மாத சிறைத்தண்டனைக்கு ஆளானார்.

## செயல்பாடுகள்

◈ பட்டியல் அமைப்போம்.

இப்பாடப் பகுதியை வாசித்து இதைப் போன்று நமது மாநிலத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்து இதழ் தயாரியுங்கள்.

◈ சொற்களை உச்சரித்துத் தவறுகளைத் திருத்தவும்.

கடலூரில் பிரந்தவர். கனவரையும் மகழையும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தவர். குடும்பத்துடன் சிறைக்குச் சென்றார் கற்ப்பிணியாகச் சிரை சென்ற அவர் பரோளில் வந்து குளந்தை பெற்றார்.

◈ பாடப்பகுதியை வாசித்து ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றியும் அவர்கள் ஆற்றிய தியாகங்களைப் பற்றியும் பட்டியலிட்டு எழுதுங்கள்.

| விடுதலைப் போராட்ட வீரர்கள் | தியாகங்கள் |
|---|---|
| அஞ்சலை அம்மாள் | குடும்பத்துடன் சிறையில் அடைக்கப்பட்டார். கர்ப்பிணியாகச் சிறைக்குச் சென்ற அவர் பரோலில் வந்து குழந்தை பெற்றார். |
| | தனது நாடகங்களில் ஆங்கிலேயர்களைச் சாடிப் பேசுவார். நாடக மேடைகளில் அடிக்கடி கைது செய்யப்படுவார். 20 முறை சிறைக்குச் சென்றார். |
| கோவை. என்.ஜி. ராமசாமி | |
| பத்மாசினி அம்மையார் | |
| | சுதந்திரப் போராளிகளின் இரகசிய மாநாடு நடத்துவதற்கு வீட்டை விற்றவர். மேடைகளில் பாடி, சுதந்திர விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். |
| | |



# எனது நாடு எனது பெருமை



## தாயின் மணிக்கொடி

நாட்டுக் கொடியை வணங்கிடுவோம் – அதை
நாளும் புகழ்ந்து நாம் பாடிடுவோம்
ஊட்டும் உணர்வினில் மூழ்கிடுவோம் – அதன்
உன்னத லட்சியம் காத்திடுவோம்

வீரர்கள் காத்த திருக்கொடியாம் – நாட்டின்
வெற்றியைத் தந்த மணிக்கொடியாம்
பாரத நாட்டின் சுதந்திரத்தில் – பெரும்
பங்கை எடுத்த சுடர்க்கொடியாம்

ஞான ஒளியினைத் தூண்டிடுமாம் – இது
நாடும் சிறப்பை அளித்திடுமாம்
வானில் சுழன்று பறக்குகையில் – இது
வண்ண அழகினைக் காட்டிடுமாம்

மானம் பெருகவே செய்திடுமாம் – ஒன்றாய்
வாழ்ந்திடும் இயல்பைத் தந்திடுமாம்
ஈனச் செயலை அகற்றிடுமாம்
எண்ணத்தில் புதுமை ஏற்றிடுமாம்

நெஞ்சை நிமிர்த்திக் கொடிபிடித்தே – நம்
நிகரிலாச் சக்தியைக் காட்டிடுவோம்
வஞ்ச நினைவினை மாற்றுவித்தே – இந்த
வையத்தில் சாந்தி வளர்த்திடுவோம்

– தே.ப. பெருமாள்

**தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி**

நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.

ஒரு போதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## செயல்பாடுகள்

- தேசியக் கொடியின் படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

**பொருத்துக.**

- காவி – இயற்கை வளமையை நினைவூட்டுகிறது.
- வெள்ளை – அறநெறியை நினைவூட்டுகிறது.
- பச்சை – தூய்மை, வாய்மை, ஒழுக்கம் ஆகியவற்றை நினைவூட்டுகிறது.
- அசோகச் சக்கரம் – சுதந்திரப் போராட்டத் தியாகிகளை நினைவூட்டுகிறது.

## நமது அடையாளங்கள்

உலகத்தில் உள்ள சுதந்திரமான நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டிற்கென்று சிறப்பான அடையாளங்களைக் கொண்டுள்ளன.



அவற்றைத் தேசியச் சின்னங்கள் என்று அழைக்கின்றோம். வலிமையான அரசியல் அமைப்பு, தேசியச் சின்னங்கள் ஆகியவை நமது நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்துபவையாக விளங்குகின்றன.

**இந்திய தேசியச் சின்னங்கள்**

| | | |
|---|---|---|
| தேசியக் கொடி | – | மூவண்ணக் கொடி |
| தேசிய கீதம் | – | ஜன கண மன |
| தேசிய விலங்கு | – | புலி |
| தேசியப் பறவை | – | மயில் |
| தேசிய மலர் | – | தாமரை |
| தேசிய மரம் | – | ஆலமரம் |
| தேசியப் பாடல் | – | வந்தே மாதரம் |

## கேரள மாநிலச் சின்னங்கள்

| | | |
|---|---|---|
| மாநில விலங்கு | – | யானை |
| மாநிலப் பறவை | – | வேழாம்பல் |
| மாநில மீன் | – | கரிமீன் |
| மாநில மலர் | – | கணிக்கொன்றை |
| மாநில மரம் | – | தென்னை |
| மாநிலப் பழம் | – | பலா |

### செயல்பாடுகள்

- வாசிப்போம் விடையளிப்போம்.
  - நமது நாட்டின் தேசியப் பறவை எது?
  - நமது மாநில மலரின் பெயர் என்ன?
  - நமது தேசிய கீதத்தை எழுதியவர் யார்?
- படத்தொகுப்பு தயார் செய்யலாம்.
- நமது நாட்டின் தேசிய, மாநிலச் சின்னங்களின் படங்களையும் அவை தொடர்பான தகவல்களையும் சேகரித்துப் படத்தொகுப்பு தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மக்கள் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு மறுநாள் பத்திரிகைச் செய்தியாக வருகிறது. அது எவ்வாறு அமைந்திருக்கும்?

## வண்ணப் பறவை

"வானில் மிதக்கும் கருமுகிலின்

வனப்பில் மயங்கி மகிழ்வுடனே

கானில் நின்று நீயாடும்

காட்சி கண்டு வியந்தேனே", என்று வண்ணத் தோகை விரித்து ஆடும் மயிலின் அழகில் மயங்கிப் பாடிய புலவர் பலர் உண்டு. கண்ணைக் கவரும் அவ்வண்ணப் பறவை பற்றி மேலும் அறிவோம் வாருங்கள்.



உலகில் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் காணப்படும் மயில்களில் மூன்று வகை உண்டு. இந்திய மயில்கள் பச்சை மற்றும் வெள்ளை நிறத்தாலானவை. ஆண் மயிலுக்கு நீண்ட தோகை உண்டு. அழகிய கண்களுடன் தலையில் சிறு கொண்டை காணப்படும். எத்தியோப்பிய மயில்களுக்கு இரட்டைக் கொண்டைகளும் உண்டு. கோழியினப் பறவையான மயில் நீண்ட கழுத்தைக் கொண்டது. நீலம், சிவப்பு , பச்சை வண்ணங்களுடன் ஒவ்வொரு அசைவிற்கும் மயில் திரும்பும் அழகே அழகு. கருமேகம் சூழ்ந்து விட்டால் தன் வண்ணத் தோகையை விரித்து ஆடும். இக்காட்சிக்கு மனதைப் பறிகொடுக்காதவர்கள் எவருமில்லை.

மயில் ஓர் அனைத்துண்ணி ஆகும். தானியங்கள், புழு, பூச்சிகள், அத்திப் பழங்கள், கிழங்குகள், தேன், கரையான்கள், தவளைகள், பாம்புகள் என இதன் உணவிற்கு நீண்ட பட்டியல் உண்டு. குறிஞ்சி நிலப் பறவையான மயில் காடுகளிலும் மலைப் பகுதிகளிலும் வாழும். மயில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வாழும்.

திருக்குறளிலும் சங்க இலக்கியங்களிலும் மயில் தோகை பற்றிய செய்திகள் உள்ளன. கி.பி. 1963–இல் மயில் இந்தியாவின் தேசியப் பறவையாகப் அறிவிக்கப்பட்டது. கி பி 1972–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தியச் சட்டப்படி மயிலை வேட்டையாடுவது குற்றமாகும். ஆபத்தைக் கண்டால் அதிக ஒலி எழுப்பும் பறவை மயில் ஆகும். இவ்வொலியை அகவல், ஆலல், ஏங்கல் என்கிறோம்.

பண்டைய மன்னர்கள் தங்கள் படைக்கலன்களை அழகுபடுத்தி வைப்பதற்கு மயிற்பீலியைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். சமணர்களும் இந்துக்களும் மயிலையும் மயிற்பீலியையும் கடவுளாக மதித்துப் போற்றுகிறார்கள்.

இயற்கை அன்னை இப்பெண்கட்கெலாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்
உனக்கோ குறையொன்றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்தளித்தாள்
என்று மயிலைப் பாவேந்தர் பாரதிதாசன் பெருமைப்படுத்துகிறார்.

## செயல்பாடுகள்

- வாசித்து விடையளிப்போம்.
  - இந்தியாவின் தேசியப் பறவை .................... ஆகும்.
  - எத்தியோப்பிய மயில்களுக்கு .................... கொண்டைகள் உண்டு.
- சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.
  - இந்திய மயில்கள் என்னென்ன நிறங்களில் காணப்படுகின்றன?
    பச்சை, மஞ்சள்.
    மஞ்சள், வெள்ளை.
    பச்சை, வெள்ளை.
  - மயில் எந்த நிலத்தின் பறவை?
    முல்லை
    குறிஞ்சி
    மருதம்
  - மயில் எழுப்பும் ஒலி.
    கரைதல்
    பேசுதல்
    அகவுதல்
- தொகுத்து எழுதுங்கள்.
  - மயிலின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- கவிதை சேகரித்தல்.
  - மயிலைப் பற்றி ஏராளமான கவிதைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைச் சேகரித்து எழுதுங்கள்.



# அகரமுதலி

| | | |
|---|---|---|
| அட்டல் | – | காய்ச்சுதல் |
| அபராதம் | – | தண்டனை |
| அமிழ்து | – | சாவாமருந்து |
| அரங்கம் | – | மேடை |
| அரும்பணி | – | சிறப்பான பணி |
| அறநெறி | – | தர்ம மார்க்கம் |
| அறிவு | – | புத்தி |
| ஆதியில் | – | ஆரம்பத்தில் |
| ஆயத்தம் | – | தயாரெடுப்பு |
| ஆவல் | – | ஆசை |
| இழுக்கு | – | குற்றம், தாழ்வு |
| உபசரணை | – | விருந்தோம்பல் |
| எய்யாமை | – | அறியாமை |
| ஏடு | – | பத்திரிக்கை , நூல் |
| ஐம்புலன்கள் | – | மெய், வாய், கண், காது, மூக்கு போன்ற ஐந்து உடல் உறுப்புகள் |
| ஒத்திருந்த | – | சேர்ந்திருந்த |
| ஒயில் | – | அழகு |
| ஒளிர்ந்திட்ட | – | ஒளிவீசும் |
| கடிந்து | – | திட்டி |
| கபளீகரம் | – | ஏமாற்றுதல் |
| கலயம் | – | குடம் |
| கலைநயம் | – | கலையழகு |
| கழிகள் | – | மூங்கில் குச்சிகள் |
| கிராக்கி | – | அதிக மதிப்பு பெறுதல் |
| கிளர்ச்சி | – | புரட்சி |
| குடித்தனம் | – | இல்வாழ்க்கை |
| குயவர் | – | மண்பாண்டங்கள் செய்பவர் |
| குறிக்கோள் | – | லட்சியம் |
| கூடம் | – | வீட்டின் மையப்பகுதி, தாழ்வாரம் |
| கூறுகள் | – | வழிமுறைகள் |
| கேலிச்சித்திரம் | – | நகைச் சுவையைத் தூண்டும் வண்ணம் வரையப்படும் ஓவியம் (கருத்தோவியம்) |
| கொல்லை | – | வீட்டின் பின்புறம் |
| சம்பாத்யம் | – | வருமானம் |
| சமயம் | – | நேரம் / மதம் |
| சவரம் | – | முகத்திலுள்ள முடியை மழித்தெடுத்தல் |
| சாரைசாரையாக | – | வரிசைவரிசையாக |
| சிதைக்கும் | – | அழிக்கும் |
| சிபாரிசு | – | பரிந்துரை |
| சுற்றத்தினர் | – | உறவினர் |
| சூளுரைத்தல் | – | சபதம் செய்தல் |
| செம்மை | – | ஒழுங்கு |
| செயற்கரிய | – | அரிய செயல் |
| சேதி | – | செய்தி |
| டி.வி. | – | தொலைக்காட்சி |
| தடங்கல் | – | தடை |
| தரணி | – | பூமி/ உலகம் / பார் |
| தழுவுதல் | – | அணைத்தல் |
| திடுமென | – | திடீரென்று. |
| திளைக்கின்றனர் | – | களிப்புடன் இருக்கின்றனர். |
| தீஞ்சுவை | – | இனியசுவை |
| துகில் | – | ஆடை |
| தூய | – | சுத்தமான |
| தேட்டம் | – | தேடல் |
| தொழுதல் | – | வணங்குதல் |
| தொற்றிக்கொள்ள | – | சேர்ந்து கொள்ள |
| தொன்னை | – | இலையினால் செய்யப்படும் உணவுக்கலன் |
| தோகை | – | சிறகு |
| நஞ்சு | – | விஷம் |

நண்பு – நட்பு
நசிந்து – குறைந்து / எண்ணிக்கையில் குறைந்து அழியும் நிலை
நவின்று – சொல்லி
நாட்டம் – விருப்பம்
நெறிப்படுத்துதல் – வழிப்படுத்துதல்
நுகர்ந்த – வாசனைபிடித்த
பறை – இசைக்கருவி
பகுத்தறிவு – காரண காரியத்தைத் தொடர்புபடுத்தி ஆயும் திறன் / மெய்யுணர்வு
பாவை – பெண்
பிளாஸ்டிக் – நெகிழி
பிரசித்தி – புகழ்
பெண்டு – பெண்
மதிநுட்பம் – கூர்மையான அறிவு, அனுபவ அறிவு
மாடம் – வீட்டின் மேல் பகுதி/ மரத்தாலானவீடு – ஏறுமாடம்
மீட்டிங் – கூட்டம்
முகை – முகம்/மொட்டு
முகிழ்ந்த – மலர்ந்த
மெய் – உண்மை
மொய் – வலிமை
மொழிந்து – பேசி
வணிகம் – வியாபாரம்
வறுமை – துன்பம்/ ஏழ்மை
விந்தை – ஆச்சரியம்
விண் – ஆகாயம் / வானம்
ஸ்ட்ரோக்குகள் – கோடுகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***